# திட்டமிட்டப் பணி சிறப்பாய் முடியும்!




**புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்**

## என் எண்ணம்



**எம்.எஸ்.மூர்த்தி**

**அன்புடையீர் வணக்கம்.**

2016 ம் ஆண்டு கடந்து 2017ம் ஆண்டு பிறந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டு பிறக்கும்போதும், வரும் ஆண்டில் "இப்படியெல்லாம் செய்ய வேண்டும்" என்று திட்டமிடுவது எல்லா மனிதர்களின் இயல்பு. அதை செயல்படுத்த முடிகிறதா என்றால் சிலரால் மட்டுமே அது சாத்தியம். சிலர் அதை செயல்படுத்தமுடியாமைக்கு சூழலே காரணம்.

எந்தவொரு செயலை செய்யும்போதும் அதை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி உரிய நபரிடம் ஒப்படைத்தால் மட்டுமே அந்தப் பணி சிறப்பாக முடியும். அது எந்த துறையாக இருந்தாலும் இந்த பார்முலாதான் சரியாக இருக்கும். ஒரு பெரிய கட்டிடம் என்பது அப்படியே எழுப்பப்படுவது அல்ல. கல், மணல், சிமெண்ட், கம்பி என்ற கட்டுமானப் பொருட்கள் முறையாக சரியாக கலந்து நிற்பதுதான் கட்டிடம் ஆகும். சின்ன குறை கூட அந்த கட்டிடத்தின் அழகையே பார்ப்பவரின் கண்ணுக்கு தெரியாமல் வைத்துவிடும். அதைப்போலதான் எப்படி ஒரு கட்டிடத்திற்கு அதன் கட்டுமானப் பொருட்கள் இணைந்தால் மட்டுமே சிறப்பு சேர்க்குமோ அப்படியே ஒரு செயலில் ஈடுபட்டு பணியாற்றும் பணியாளர்கள் இணைந்து செயல்பட்டால்தான் எடுத்தப்பணி முடிக்க முடியும். சமுதாயத்தில் கூட கூடுதல் பொறுப்பு (Collective Responsibility) மட்டுமே வெற்றியைத் தரும். அவர் செய்வார் என்று இவரும் இவர் செய்வார் என்று அவரும் இருந்தால் பின் எவரும் செய்யாமல் அந்தப் பணி தோல்வியில் முடியும். இதற்கு ஒரு உதாரணமாக கதையை சொல்லலாம்.

"ஒரு மன்னன் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்ய எண்ணினான். அந்த கோயில் கோபுர கலசத்தின் மீது ஊற்றப்பட வேண்டிய பாலை தனது நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஒரு சொம்பில் கொண்டு வந்து அதை அரண்மனை முன்பு வைக்கப்பட்டுள்ள பெரிய அண்டாவில் ஊற்றச் சொன்னானாம். அண்டாவை பெரிய மூடி போட்டு வைத்திடவும் உத்தரவிட்டானாம். மறுநாள் அண்டாவை திறந்து பாலை ஊற்ற நினைத்தபோது அந்த பாத்திரம் முழுவதும் தண்ணீரே இருந்ததாம். பின்புதான் அரசனுக்கு தெரிந்தது. அவன் பாலை ஊற்றட்டும். நாம் கொஞ்சம் தண்ணியை ஊற்றுவோம். பாலில் தண்ணீர் கலந்தால் அது தெரியவா போகிறது? என்று எண்ணி எல்லோரும் தண்ணியை ஊற்றினார்களாம்."

இந்தக் கதையில் வரும் சம்பவம் நமது சமுதாயத்தை சுற்றியுள்ள நபர்களின் மனநிலையைக் காட்டும். எனவே தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பு சரியாக செயல்படுத்தப்பட்டு அதை கடைசி வரை கொண்டு செல்லும் போதுதான்அந்தப்பணி சிறப்பாக அமையும்.

எனவே திட்டமிட்டு செயல்களை ஆற்றி வெற்றி பெறுவோம்! அனைவருக்கும் எங்கள் மித்ரா குழுமத்தின் சார்பில் புத்தாண்டு, பொங்கல் மற்றும் இதர பண்டிகைக்கால நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். நீங்களும் எங்கள் மித்ரா குழுமத்தில் இணைந்து உங்கள் தொழில் வளர்ச்சியையும், நட்புவட்டாரத்தையும் பெருக்கிக் கொள்ளவும் வரவேற்கிறோம்!

- ஆசிரியர்



# அம்மா இல்லாத அ.தி.மு.க

## பொதுச் செயலாளர் ஆனார் 'சின்னம்மா'!

தஞ்சை மாவட்டம் மன்னார்குடியைச் சேர்ந்த வி.கே. சசிகலா அ.இ.அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

29.12.2016 அன்று சென்னையில் நடைபெற்ற பொதுக்குழுவின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி பொதுக்குழுவில் பங்கேற்காத சசிகலாவை போயஸ் கார்டனில் சந்தித்து அதற்கான தீர்மானத்தை முதலமைச்சர் பன்னீர் செல்வம் தலைமையிலான குழுவினர் வழங்கினர். அவரும் அதை ஏற்று 31.12.2016 பொறுப்பேற்றுக் கொண்டு விட்டார்.

சசிகலா அக்கட்சியின் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அந்தக் கட்சியின் வரலாற்றை கொஞ்சம் அசைபோட்டு பார்க்கலாம். அப்போதுதான் அம்மா இல்லாத அ.தி.மு.க.வின் கடந்த வந்த பாதை தெரியும்.

தந்தை பெரியாரின் திராவிடக் கழகத்திலிருந்து விலகி பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சியை 1949ம் ஆண்டு துவக்கினார். இந்தக் கட்சியின் பெயர் தி.மு.க. என்றே அனைவராலும் அழைக்கப்பட்டது. பெரியாரிடமிருந்து பிரிந்தாலும் அவரையே தலைவராக ஏற்றுக்கொண்ட காரணத்தால் தம்முடைய கட்சிக்கு தலைவர் பதவி கிடையாது. மாறாக முழு அதிகாரம் கொண்ட பொதுச்செயலாளர் பதவி உருவாக்கப்படும் என்றும் அந்தப் பதவிக்கு நாவலர் நெடுஞ்செழியன் பொறுப்பேற்பார் என்றும் அறிவித்தார்.

அண்ணாவின் மறைவிற்கு பின்பு யார் வழிநடத்துவது என்ற நிலை ஏற்பட்டபோது கருணாநிதியா? நெடுஞ்செழியனா? என்ற கேள்வி எழுந்தது. எம்.ஜி.ஆரின் ஆதரவு கலைஞர் கருணாநிதிக்கே இருந்ததால் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடிந்தது.

# உள்ளே...

அம்மா இல்லாத அ.தி.மு.க...............4

தேனும் இலவங்கப் பட்டையும் .......7

குறையொன்றுமில்லை ......................8

கடுக்காய் கொடுக்கலாம்................ 11

RELY ON COMMON SENSE............. 12

THIS IS HOW FRIENDSHIP BREAKS..........................................13

சேமிக்கும் பழக்கத்தை குழந்தையிடம் உருவாக்குவோம்!.....14

வர்தா..................................................16

ஏழைகளின் வள்ளல் எம்.ஜி.ஆர்.....18

பொங்கலோ பொங்கல்......................20

தான்தோன்றீஸ்வரர் .......................... 23

சிலிண்டர் எச்சரிக்கை ........................24

சமூக நல்லிணக்கக் காவலர் திண்டுக்கல் காஜாமைதீன்...............26

இலக்கிய ஆய்வாளர்களை வரவேற்கும் இரமணன்.......................27

எம்பதில்கள் .......................................28

ஆடம்ஸ் சினிமா செய்திகள் ...............30

கபாலிகான்........................................32

கண்ணதாசன் சிந்தனைகள்..............34



ஆயினும் கட்சிக்கு அதிகாரம் படைத்த பொதுச்செயலாளர் பதவி நெடுஞ்செழியனிடமே இருந்தது. இதனால் கலைஞர் கருணாநிதி கட்சி விதிகளை தளர்த்தி தி.மு.க.விற்கு தலைமைப் பதவியை உருவாக்கி இன்று வரை அவரே தலைவராக இருந்து வருகிறார். நெடுஞ்செழியன் தி.மு.க.வை விட்டு விலகியபின்பு அக்கட்சியின் பொதுச்செயலாளராக க.அன்பழகன் இன்றுவரை தொடர்ந்து இருந்து வருகிறார். ஏறத்தாழ 95 வயதாகிவிட்டபோதும், கட்சி எடுக்கும் முடிவுக்கு அதிகாரம் வழங்கும் பொறுப்பில் அன்பழகன் இருந்து வருகிறார்.


கருணாநிதியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தி.மு.க.விலிருந்து விலகி எம்.ஜி.ஆர் தனியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றக் கட்சியைத் தொடங்கினார். இதை சுருக்கமாக அ.தி.மு.க. என்று அழைத்தனர். இந்திராகாந்தி






நெருக்கடி நிலை கொண்டு வந்தபோது மாநிலக் கட்சிகளுக்கு தடைவிதிக்கப்போகிறார் என்று தெரியவந்தவுடன் தன்னுடைய கட்சியின் பெயரை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றி வைத்தார். இதை சுருக்கமாக அ.இ.அ.தி.மு.க. (AIADMK) என்று அழைக்கப்பட்டது.





எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வரும்வரை அவரே பொதுச்செயலாளர் ஆக இருந்தார். ஆட்சிக்கு வந்தபிறகு கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை ப.உ.சண்முகம், ராகவானந்தம் ஆகியோருக்கு வழங்கினார். எம்.ஜி.ஆர். தனக்கு பிறகு ஜெயலலிதாவை கட்சியை வழிநடத்தும் பொருட்டு அரசியலுக்கு கொண்டு வந்தார். படிப்படியாக அ.இ.அ.தி.மு.க.வின் தவிர்க்க முடியாத சக்தியாக ஜெயலலிதா விளங்கினார். எம்.ஜி.ஆர். மறைவுக்கு பின் பொதுச்செயலாளராக பொறுப்பேற்று ஜெயலலிதா அவர் மறையும் வரை நிரந்தரப் பொதுச்செயலாளர் என்றே அழைக்கப்பட்டார்.

**ஜெயலலிதாவின் மறைவிற்கு பின் அந்த பொறுப்பு சசிகலா வரவேண்டுமென்று அனைவரும் விரும்பினர். அந்தக் கட்சிக்காரர்கள் விரும்பியதில் தவறில்லை. ஆனால் அரசியலுக்கே சம்பந்தமில்லாத திரைப்படத்துறையினர், சாதி சங்கத்தினர், விவசாய சங்கத்தினர், தலைவர்களைப்போல் வேஷம் போட்டு நடனம் ஆடம் நடனக்கலைஞர்கள் இவர்களெல்லாம் சென்று சசிகலாவை தாங்கள் தான் பொறுப்பேற்க வேண்டும் என்று வற்புறுத்தியது "இதெல்லாம் ரொம்ப ஓவர்" என்றே விமர்சிக்கப்பட்டது.**

எது எப்படியாயினும் ஜெயலலிதாவை 33 வருடங்களாக அவருடன் இருந்து அவரை கவனித்துக் கொண்டதைப்போல 45 வருட பாரம்பரியமுள்ள கட்சியையும் வழிநடத்திச் செல்வார் என்று அந்த கட்சியின் கடைசி தொண்டன் நினைக்கிறார்.

நமது எதிர்பார்ப்பும் அதுதான்.

**- எம். எஸ்.மூர்த்தி**



# தேனும் இலவங்கப் பட்டையும்



**உ**லகத்தில் கெட்டு போகாத ஒரே உணவு தேன் தான்! அதிகபட்ச மாற்றம் எதுவென்றால், தேன் உறைந்து கிறிஸ்டல்களாக மாறும். அப்போது சூடான தண்ணீரில் தேன் பாட்டிலை வைத்தால் இளகி மீண்டும் பழைய நிலைக்கு மாறிவிடும்.

**தேனை சூடு படுத்தக்கூடாது**

தேனை மைக்ரோவேவிலோ அல்லது அடுப்பிலோ வைத்து சூடு செய்தால் அதில் உள்ள சத்துக்கள் அழிந்து விடும். உலகில் எல்லா பகுதிகளிலும் கிடைக்கும் உணவு தேன்.

தேனின் மருத்துவ குணங்கள் சொல்லி தீராதது. நாம் இதனை அறிந்து, நமது அன்றாட வாழ்வில் தேனை உபயோகிக்க வேண்டும். ஆரோக்கியமாக வாழ வேண்டும்.

**தேனும் இலவங்கப் பட்டையும் குணப்படுத்தும் நோய்கள்**

**இதய நோய்**

இன்று எல்லா வயதினரையும் தாக்கும் நோய் இதய நோய். இந்த நோய் ஏற்பட மன உளைச்சல், பரம்பரை, கொழுப்பு சத்து கூடுதல் என்று பல காரணங்கள் சொல்லப் படுகின்றன. இதயத்தின் ரத்தக் குழாய்களில், நாளங்களில் அடைப்பு ஏற்படுவதால், போதிய ரத்தம் கிடைக்காமல் இருதயம் செயல் இழக்கிறது.

**அற்புத மருந்து இதோ!**

தினமும் காலையில் லவங்கப்பட்டை பொடியை தேனுடன் சேர்த்து குழைத்து சிற்றுண்டியுடன் சேர்த்து சாப்பிடுங்கள்.

2 கரண்டி தேன், 1 கரண்டி பொடி என்ற கணக்கில் ரொட்டியுடன் அல்லது நீங்கள் சாப்பிடும் சிற்றுண்டியுடன் சாப்பிட்டு வாருங்கள். இதய நோய் உங்களை மீண்டும் அணுகாது. ஏற்கெனவே உங்களுக்கு மாரடைப்பு

வந்திருந்தால், மீண்டும் நிச்சயம் வராது. இதய நோய் உள்ளவர்களுக்கு சுவாசம் மற்றும் இதய துடிப்பு பலவீனமாக இருக்கும். அவர்களுக்கு இந்த தேனும் லவங்கப்பட்டை பொடியும் ஒரு வரப்பிரசாதம். ஒரே மாதத்தில் அவர்களுக்கு வித்தியாசம் தெரியும். அமெரிக்கா, கனடா நாடுகளில் மருத்துவ மனைகளில் இந்த உணவைக் கொடுத்து வருகிறார்கள். அதிசயக்கத் தக்க மாற்றங்களை பதிவு செய்துள்ளார்கள். அடைப்பை நீக்கி, இரத்த ஓட்டத்தைஅதிகரித்து, மூச்சு வாங்குவதை குறைத்து, இதய துடிப்பை பலப்படுத்தி, இதய நோயை விரட்டி அடிக்கும் அற்புத சக்தி கொண்டது தேனும் லவங்கமும்.

ஆர்த்ரிரைட்டீஸ் என்கின்ற முடக்குவாதம். மூட்டு வலி உள்ளவர்கள், நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு தித்திக்கும் தேன் போன்ற செய்தி. தினமும் காலை மற்றும் இரவு நேரங்களில் 1 கப் வெந்நீரில் 2 தேக்கரண்டி தேன், 1 சின்ன தேக்கரண்டி லவங்க பொடியைக் கலந்து குடித்து வாருங்கள்.ஒரே வாரத்தில் உங்கள் வலி குறைவது தெரியும். ‘எத்தகைய கடுமையான மூட்டுவலியாக இருந்தாலும் 1 மாதத்தில் குணம் நிச்சயம்’ என்று அடித்துச் சொல்கிறார்கள்கோபன்ஹேகன் பல்கலைக் கழக ஆய்வு மையத்தினர். 200 மூட்டுவலிகாரர்களை கொண்டு ஒரு சோதனை நடத்தினர்.

தினமும் காலை 1 தேக்கரண்டி தேனும்,1/2 தேக்கரண்டி லவங்கப் பொடியும் கலந்து கொடுத்து வந்தனர். ஒரே வாரத்தில் 73நோயாளிகள் வலிநிவாரணம் கண்டனர். ஒரு மாதத்தில் அனைவரும் நடக்கத் தொடங்கினர். இந்த காலத்தில் மூட்டு வலி இல்லாதவர் யார்? அதனால் இந்த கண்கண்ட மருந்தை இன்றே தொடங்கி வாழ்க்கை பயணத்தின் வலியைக் குறைத்துக் கொள்வோம்!



# குறையொன்றுமில்லை...

## சாதனை புரிவோம்

இயற்கையின் படைப்பில் ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் அழகானவை. மனிதனும் அது போலத்தான்.

ஒவ்வொருவரும் மற்றவரிடமிருந்து தோற்றத்தில், குணத்தில், திறமைகளில் என எல்லா வகையிலும் வேறுபடுகின்றனர். ஆனால் யாரும் முழுமையோடு படைக்கப்படுவதில்லை. குறைகள் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கத்தான் செய்கின்றன. அதை பெரிதாய் நினைத்து வருந்துகிறவன் உல்கையே வெறுத்துப்போய்ப் பார்க்கிறான். அதை உடைத்து எழுபவன் உலகையே திரும்பிப் பார்க்க வைக்கிறான். தங்கள் உடலிலுள்ள குறைகளை துச்சமாய் மிதித்து, வாழ்க்கை என்னும் சமுத்திரத்தில் எதிர்நீச்சல் அடித்து உலகின் பார்வையை தங்கள் மீது திருப்பிய ஒருசில சாதனையாளர்கள் பற்றிய தொகுப்பு இதோ...

### ஹெலென் கெல்லர்



இளம் வயதில் ஏற்பட்ட மர்மக் காய்ச்சலால் பார்வை, பேச்சு, கேட்கும் திறன் அனைத்தையும் இழந்தவர் ஹெலென் கெல்லர். ஆனி சுலிவன் என்பவரால் சைகை மொழி கற்பிக்கப்பட்டு பிறரோடு தொடர்புகொள்ளத் தொடங்கினார். பேச்சு மற்றும் கேட்கும் திறனை இழந்தவர்களில் முதன்முதல் இளங்கலை பட்டம் பெற்றவர் இவர்தான். சுமார் 40 நாடுகளுக்குப் பயணம் செய்து மாற்றுத் திறன் கொண்டவர்கள்,தங்கள் நம்பிக்கையை இழக்காமல் இருக்க பல சொற்பொழிவுகள் ஆற்றினார். பல்வேறு புத்தகங்களை எழுதியுள்ள இவர், பல இடங்களில் தொழிலாளர் நலனுக்காகவும், பெண்கள் உரிமைக்காகவும் குரல் கொடுத்துள்ளார். உலகிலுள்ள மாற்றுத் திறன் கொண்ட மக்களுக்கான போராளியாகக் கருதப்பட்டார் ஹெலென். இவரது வாழ்க்கையைத் தழுவி 'தி மிராக்கிள் உமன்' என்ற பெயரில் நாடகங்களும் திரைப்படமும் வெளியாகி, பெரும் வரவேற்பைப் பெற்றன. இவர் பிறந்த தினமான ஜூன் 27, அமெரிக்காவில் ஹெலென் கெல்லர் தினமாகக் கொண்டாடப் படுகிறது.

### சுதா சந்திரன்



நம் அனைவருக்கும் மிகவும் பரிச்சய மானவர். தமிழ் தொலைக்காட்சி களிலும் திரைப்படங்களிலும் தோன்றியவர். மிகச் சிறந்த பரதக் கலைஞர். இயற்கை இவரோடு விளையாடியபோது இவருக்கு வயது 17. திருச்சி அருகே ஏற்பட்ட விபத்தால் இவர் ஒரு காலை இழக்க நேரிட்டது, அதன் பிறகு,'ஜெய்ப்பூர் ஃபூட்' எனப்படும் செயற்கை காலின் உதவியோடு நடக்கத் தொடங்கினார். ஆனால் இவர் நடப்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை.


தான் உயிரிலும் மேலாய் நேசித்த நடனத்தில் தன் கவனத்தைத் திருப்பினார். தேர்ந்த பரதக் கலைஞரான இவர், உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று கச்சேரிகள் நடத்தியுள்ளார். இவரது வாழ்க்கையைத் தழுவி தெலுங்கில் 'மயூரா' (தமிழில் 'மயூரி') என்ற திரைப்படம் எடுக்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வருகிறார் இவர். தனது சோதனையை பெரிதுபடுத்தாமல் நாட்டியத்தில் சாதித்துக் காட்டி பலருக்கும் முன்னுதாரணமாக விளங்குகிறார்.

### ஸ்டீபன் ஹாகிங்



1942-ல் பிறந்த இந்த அறிவியல் மேதை தனது 21வது வயதில் தசையூட்டமற்ற பக்க மரபு நோயால் பாதிக்கப் பட்டார். கை, கால் முழுவதும் செயலிழந்து வீல் சேரிலேயே வாழ்க்கை கழிந்த போதும், இவரது மூளையின் செயல்பாடு சற்றும் ஓயவில்லை. சார்பியல் மற்றும் குவான்டம் ஈர்ப்பில் அரிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவர். இவரது 'ப்ரீஃப் ஹிஸ்டரி ஆப் டைம்' என்ற புத்தகம், விற்பனையில் பல சாதனைகள் நிகழ்த்தியது. 2009ல் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டபோதிலும், அசராமல் வேற்றுகிரக வாசிகளைப் பற்றிய ஆராய்ச்சிகளைத் தொடங்கியுள்ளார் இவர்.

### ஜான் நேஷ்



நோபல் பரிசு பெற்ற இவர், கணிதத்திற்கு மிகப் பெரும் பங்காற்றியவர். இவர் கண்டுபிடித்த ஆட்டக் கோட்பாடு பொருளாதாரம், அரசியல், உயிரியல், கணினி அறிவியல் எனப் பல இடங்களிலும் பயன்படுகிறது. சைசோப் ரேனியா என்னும் மன நோயால் பாதிக்கப்பட்ட நேஷ், ஜாமெட்ரி, டிபரென்சியல் சமன்பாடு முதலியவற்றிற்கும் முன்னோடியாய்த் திகழ்ந்தவர். தீவிர மன நோயால் பாதிக்கப்பட்ட இவர், கற்பனையாக சில விஷயங்களை புனைந்து கொண்டு பயப்படுவார் என்று அவரது மனைவி கூறியுள்ளார். ஆனாலும் தனக்கு மிகவும் பிடித்த கணிதத்தை அவர் ஒருபோதும் ஒதுக்கவில்லை. கணிதத்தோடு வாழ்ந்ததால்தான் அவர் நீண்ட காலம் உயிரோடு இருந்தார் என அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர். 1994ம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் நினைவுப் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.

### பீத்தோவன்



இசை உலகின் பிதாமகனாய் கருதப்பட்டவர் பீத்தோவன். மிகச்சிறந்த பியானோ இசைக்கலைஞரான இவர், மேற்கத்திய இசையின் பரிணாமத்திற்கு பெரும் பாலமாய் விளங்கியவர். இவர் முதன்முதலில் இசைக் கச்சேரி நடத்தையில் இவருக்கு வயது 8. தனது 26வது வயதில் கேட்கும் திறனை முழுமையாக இழந்தார் பீத்தோவன். ஆனால் இவர் அசரவில்லை. இசையிலேயே மூழ்கினார். இசையில் பல முத்துக்களை அள்ளினார். அவற்றுள் நைன்த் சிம்பனி, வயலின் கான்செர்டோ போன்றவை குறிப்பிடத்தக்கவை. பைபோலார் நோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார் இந்த இசை மேதை.

### மர்லா ருன்யான்



அமெரிக்காவைச் சார்ந்த தடகள வீராங்கனையான இவர் பார்வையற்றவராவார். மாற்றுத் திறனாளிகளுக்கான 5000 மீட்டர் ஓட்டத்தில், மூன்று முறை உலக சாம்பியன் பட்டம் வென்றவர். மாற்றுத் திறனாளிகளுக்கு நடத்தப்படும் பாராலிம்பிக் போட்டிகளில் பல பதக்கங்களை வென்றுள்ளார். 1992 பாராலிம்பிக்கில் 4 தங்கப் பதக்கங்களும்,1996ம் ஆண்டு 1 தங்கம் மற்றும் 1 வெள்ளிப் பதக்கமும் வென்றுள்ளார். ஹெப்டத்லான், மாரத்தான், 500 மீட்டர், 20000 மீட்டர் ஆகிய பிரிவுகளில் அமெரிக்காவின் தேசிய சாதனைகளுக்குச் சொந்தக்காரர் இவர்தான்.

## நிக் வுஜூசிக்



வலைத்தளங்களில் பிசியாக இருப்பவர்கள் இவரைத் தெரியாமல் இருக்க முடியாது. 1982ல் ஆஸ்திரேலியாவில் பிறந்த நிக்கிற்கு இரண்டு கைகள், கால்கள் கிடையாது. சிறு வயதில் பல துன்பங்களுக்கும் மன உளைச்சல்களுக்கும் ஆளான நிக், பின்னர் வாழ்க்கையை எதிர்த்துப் போராடத் தொடங்கினார். ‘லைஃப் வித்தவுட் லிம்ப்ஸ்’ என்ற அமைப்பைத் தொடங்கி, மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுக்காக உதவி செய்து வருகிறார். பட்டர்பிளை சர்க்கஸ் எனும் குறும்படத்தில் நடித்து, அதற்காக சில விருதுகளும் வென்றுள்ளார். 2005ம் ஆண்டிற்கான சிறந்த ஆஸ்திரேலியன் என்னும் விருது இவருக்கு வழங்கப்பட்டது. “என்னுடைய வீட்டில் நான் எப்போதும் ஷூக்கள் வைத்திருப்பேன். எனக்கு ஆச்சரியங்களின் மீது அதீத நம்பிக்கை உள்ளது. நம்பிக்கை எனக்கு மிகவும் அதிகமாகவே உள்ளது” என்று சிரிக்கிறார் நிக்.

## ஆஸ்கர் பிஸ்டோரியஸ்




மாற்றுத்திறன் கொண்ட வீரர்கள் பாராலிம்பிக் போட்டிகளில் கலக்க, இவரோ அதற்கும் ஒரு படி மேலே போனவர். மாற்றுத்திறன் கொண்டிருந்தாலும் சாதாரண சக வீரர்களோடு 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று, உலகை வியப்பில் ஆழ்த்தினார். இரண்டு கால்களும் இல்லாமல் கார்பன் பிளேடு எனப்படும் செயற்கை காலின் உதவியோடு ஓடும் இவர், 2011ம் ஆண்டு உலக தடகளப் போட்டியில் 4x400 மீட்டர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றார். இதன்மூலம் உலகப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் மாற்றுத்திறன் கொண்ட வீரர் என்ற சாதனையைப் படைத்தார். பாராலிம்பிக் போட்டிகளில் இவர் 1 வெண்கலம்,1 வெள்ளி மற்றும் 6 தங்கப் பதக்கங்கள் வென்றுள்ளார். 2007ம் ஆண்டின் சிறந்த மனிதராக இவரை BBC தேர்வு செய்தது.

## அருநிமா சின்ஹா



இந்திய மூவர்ணக் கொடியை உலகின் மிக உயரத்தில் பறக்கவிட்டவர் இந்த கால் இழந்த சாதனைப் பெண். 2011ல் தொடர்வண்டியிலிருந்து சில திருடர்களால் வெளியே தூக்கி வீசப்பட்டார். மற்றொரு டிராக்கில் வந்த இன்னொரு ரயில் இவரது காலை நசுக்கியதில் தனது காலை இழந்தார் அருநிமா. தனது பிரச்சனையையே தனது பலமாகக் கருதிய இவர், 2013ம் ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி நம் தேசியக் கொடியை நட்டு தேசத்திற்குப் பெருமை தேடித் தந்தார். உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்திய் மாற்றுத் திறனாளி இவர்தான். முன்னாள் தேசிய வாலிபால் மற்றும் கால்பந்து வீராங்கனையான இவர், புற்றுநோயிலிருந்து விடுபட்ட இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கால், தான் மிகவும் ஊக்கம் பெற்றதாகக் கூறினார். **இவர்கள் மட்டுமல்ல இவர்கள் போல பலரும் தங்கள் சோதனைகளை சாதனைகளாக மாற்றியுள்ளனர். உடலிலிருக்கும் ஒவ்வொரு நரம்பிலும் நம்பிக்கை வேரூன்றியிருக்க வேண்டும். மனம் திடமாய் இருந்தால் போதும் செவ்வாய் கிரகத்திற்கே செல்ஃபி எடுக்கச் செல்லலாம்.**

ஒவ்வொருவருக்கும் சோதனைகள் உண்டு. அதனை கடந்து சாதனை புரிந்தவர்களே ஜொலிக்கின்றனர். மனமிருந்தால் மார்க்கமுண்டு!

# கடுக்காய் கொடுக்கலாம்!

இயற்கை நமக்கு பல்வேறு வளங்களை வழங்கியுள்ளது. உடல் உறுதி பெறவும், நோயற்ற வாழ்வைப் பெறவும், நோய்களைக் குணப்படுத்தவும், ஆரோக்கியம் மேம்படவும், உடல் உள்ளுறுப்புகள் பலப்படவும் உதவக்கூடிய வழிமுறைகளை, தாவரங்கள் மூலம் இயற்கை நமக்கு வாரி வழங்குகிறது. இந்த இயற்கை தரும் முறைகளை செவ்வனே பயன்படுத்தினால் நோயற்ற வாழ்வை வாழலாம். அவ்வகையில் மிகவும் சிறப்பு வாய்ந்தது கடுக்காய். கடுக்காய் உண்டால் மிடுக்காய் வாழலாம். கடுக்காயின் கடினமான மேல் பகுதியே மருத்துவ குணமுடையது. அழுத்தமான உள்கொட்டை பயனற்றது. இஞ்சியில் மேல்தோலும் கடுக்காயின் உள்கொட்டையும் எப்போதும் பயன்படுத்தக்கூடாதவை. கடுக்காய் என்ற பெயரில் நாட்டு மருந்து கடைகளிலும், காதி கிராப்ட் கடைகளிலும் கிடைக்கும். பொடியாகவும் கிடைக்கிறது. கடுக்காயின் சதைப்பற்றான மேல் தோலை இடித்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு மாலை அல்லது இரவு வேளைகளில் அரை ஸ்பூன் எடுத்து குளிர்ந்த நீரிலோ, வெந்நீரிலோ, பாலிலோ கலந்து அருந்தலாம்.

வாயிலும், தொண்டையிலும், இரப்பையிலும், குடலிலும் உள்ள ரணங்களை ஆற்றிவிடும் வல்லமை பெற்றது. அதுமட்டுமின்றி பல சிக்கல்களை ஏற்படுத்தும் மலச்சிக்கலைப் போக்கி குடல் சக்தியை ஊக்கப்படுத்தும். பசியைத் தூண்டி, ரத்தத்தை சுத்தப்படுத்தி, வாதம் பித்தம், கபம் ஆகியவற்றால் வரும் ஏராளமான நோய்களைப் போக்கும். ஊட்டத்தை ஊட்டி இளமையை நீடிக்க வைத்து மிடுக்கோடு வாழ வழி செய்யும். **கடுக்காயும் தாயும் கருத்தில் ஒன்று என்றாலும் கடுக்காய் தாய்க்கு அதிகம் காண் நீ கடுக்காய் நோய் ஓட்டி உடல் தேற்றும் உற்ற அன்னையே சுவைகள் ஊட்டி உடல் தேற்றும் உவந்து. என்ற மருத்துவப் பாடல் கடுக்காய் பெற்ற தாயைவிடப் பெரியது எனப் புகழ்கிறது.**

சிறுகுழந்தைகளுக்கு சந்தனக்கல்லில் கடுக்காயை சிறிது உரசி இழைத்து பாலில் கலந்து புகட்டலாம். காது நோய்களுக்கும் கண்கண்ட மருந்தாகத் திகழ்கிறது.

ஒருவனுடைய உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உண்டு என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.


"பெற்ற தாயைவிட கடுக்காயை ஒருபடி மேலாய் கருது' என்று சித்தர்கள் கூறுகிறார்கள். பெற்ற தாயானவள் தன் பிள்ளைமேல் உள்ள பாச மிகுதியால், கண்ட உணவுகளையும் வகை வகையாய் செய்து கொடுத்து அவன் வயிற்றைக் கெடுத்துவிடுவாள். ஆனால் கடுக்காயோ வயிற்றில் உள்ள கழிவுகளையெல்லாம் வெளித்தள்ளி, அவனுடைய பிறவிப்பயனை நீட்டித்து வருகிறது.


கடுக்காயை லேகியம் செய்து உண்ண, நரை, திரை மாறி காய சித்தியாகும். இதற்கு 'அகஸ்தியர் ரசாயனம்' என்று பெயர். வலிமையூட்டி, நீர்ப்பெருக்கி, உள்ளழலகற்றி போன்ற குணங்களைக் கொண்டுள்ளது.

புண்கள், கண்நோய், இருமல், காமாலை, கைகால் நமச்சல், தலைநோய், இரைப்பு, தொண்டை வலி, நாவறட்சி, மார்பு நோய், மூலம், மேகம், வயிற்றுப்பொருமல், விக்கல் போன்றவைகளைக் குணப்படுத்தும்.

சிறுகுழந்தைகளுக்கு சந்தனக்கல்லில் கடுக்காயை சிறிது உரசி இழைத்து பாலில் கலந்து புகட்டலாம். காது நோய்களுக்கும் கண்கண்ட மருந்தாகத் திகழ்கிறது. தேவலோகத்தில் இந்திரன் அமிர்தத்தை அருந்தும்போது ஒரு துளி அமிர்தம் சிந்தியதாம். அத்துளி பூமியில் விழுந்து கடுக்காய் மரமாக உருவெடுத்தது என புராணம் உரைக்கிறது. சுமார் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சித்த மருத்துவ நூல்களில் கடுக்காய் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. கடுக்காயை உபயோகிக்கும்போது அதை உடைத்து அதில் உள்ள உட்கொட்டையில் இருக்கும் ஒரு நரம்பை நீக்க வேண்டும். அது விஷத்தன்மை உடையது. இது தெரியாமல் கடையில் விற்கும் கடுக்காய் பொடியை வாங்கி உபயோகித்து பின் வருந்துவதில் பலனில்லை.

**- ஆர். குணசேகர்**





# RELY ON COMMON SENSE



Superstition is based on ignorance. Lot of practices are followed blindly without reasoning. Superstitions originate in the diseased brains of fallible men, and upon no subject are they so prevalent as upon religious subjects. Kindly read the story below to know how Superstition is developed.

Once upon a time a Guru lived in a village with his disciples. Every evening the guru would sit on his seat and teach lessons to his disciples.. It so happened one day that a cat created a big disturbance to the teachings of Guru. Being greatly annoyed by the cat, the guru instructed his disciples to tie the cat to a tree.So doing, the guru then delivered the lecture without disturbance. Thereafter before starting his lecture the guru regularly confirmed with his disciples whether the cat was tied to the tree . After some years the guru died. New Guru took charge and taught the lessons to the disciples. The disciples continued tying the cat to the tree before the commencement of teachings.. When the cat died, they bought another cat and thus the ritual of tying a cat to a tree before the commencement of the lessons continued generation after generation.0n a later date one of the renowned followers wrote an elaborate treatise on the spiritual significance of tying a cat to a tree before beginning of one's studies.

One way to overcome your superstitious beliefs is to learn where they come from to begin with. Realize that there's no rational proof that these superstitions can affect your life. Superstitions lie in age-old traditions. Like many traditions, they continue to be enacted, but they don't really serve a purpose. Expect the best instead of the worst. Realize that you have the power to make your own luck. When making decisions, rely on common sense and a sound pattern of reasoning. Make a habit of being positive and your superstitious beliefs will feel superfluous. When you talk to people, talk about the things you're excited about instead of complaining. Spend time with people who are not superstitious.

"Strong Minds Discuss Ideas, Average minds Discuss Events, Weak mind Discuss People" ..........Socrates

**- G. RamMohan**



# THIS IS HOW FRIENDSHIP BREAKS

```Both friends will think that they are too busy. They will not contact each other thinking it may be disturbing.

As time passes, both will think... "let the other contact me"

After a while, each will think... "why should I contact first?"

Here, your love will gradually be converted to pride

Finally, without contact, the memory becomes weak

They forget each other...

One day they will meet and blame one another

So, let's keep in touch, my dear friend

I don't wanna be one of those kind of friends

So here I am saying,

I miss you! And hope that all is well with you?

Life is no fun without FRIENDS

It's "World Best Friends Week." Send this to all your good friends. Even me, if I am one of them.

See how many you get back... If you get more than 3 you are really a lovable person...

I am waiting```

END OF YEAR APPOLOGY

Those who think I am proud... I apologize. Pls forgive me.

Those who think I've ignored them... I apologize. Pls forgive me.

Those who felt offended by my attitude or character... I apologize. Pls forgive me.

Those who I didn't visit or called during this year... I apologize. Pls forgive me.

Those who I hurt by words or action... I apologize. Pls forgive me.

Those whose promises I didn't fulfill... I apologize. Pls forgive me.

Those who felt I am too serious and not friendly... I apologize. Pls forgive me.

Pls don't enter 2017 with baggage of hurts and bitterness... Be better!



**- S. Suruthi Lakshmi**
XI-Std
Vidyaa Vikaas M.H.S.School
Karamadai
```



# சேமிக்கும் பழக்கத்தை குழந்தையிடம் உருவாக்குவோம்!

குழந்தை வளர்ப்பு தொடர்-4
M.உஷா குமாரபாளையம்

விரல் சப்புவது என்பது குழந்தைகளின் தவிர்க்க முடியாத ஒரு செயலாக உள்ளது. அப்படி விரல் சப்பினால் குழந்தையின் பல் உயர்ந்துவிடும் என்று பயப்படும் பெற்றோர், அக்குழந்தையை அடிக்காத குறையாக கண்டிக்கும் நிலைக்கு ஆளாகி விடுகிறார்கள். பெரும்பாலான பெற்றோர், தங்கள் குழந்தைகள் விரல் சப்பினால் கோபத்தில் சட்டென்று பிடித்து இழுத்துவிடுவதாக கூறினார்கள். சில பெற்றோர், குழந்தையின் கை சப்பும் பழக்கத்தை தவிர்க்க, அக்குழந்தையின் கை விரல்களில் கசப்பு மருந்தை தடவி விட்டதை ஒப்புக் கொண்டுள்ளனர். இன்னும் ஒரு சில பேரோ விரல் சப்பும் தங்கள் குழந்தையை அடிப்பதாக குறிப்பிட்டுள்ளனர். ஒரு சிலரே விரல் சப்புவது குழந்தையின் வளர்ச்சியின் ஒரு கட்டம் என்பதை உணர்ந்துள்ளனர்.

ஒரு குழந்தையிடம் விரல் சப்பும் பழக்கம் ஆரம்பத்தில் இருந்தாலும், படிப்படியாக அதில் இருந்து அதை விடுபட வைத்துவிடலாம். அதுவரை பெற்றோர்தான் கம்பை தூக்காமல் இருக்க வேண்டும், குழந்தையை அடிக்க! பொதுவாக 3 வயதுக்குமேல் ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சி அதிகமாக இருக்கும். 6 வயதுக்குமேல் அதன் குணம், செயல்பாடுகளில் புதுப்புது மாற்றங்கள் தெரிய ஆரம்பிக்கும். அதனால், குழந்தையை சரியாக ஹேண்டில் செய்வது அவசியமாகிறது.

**பெற்றோருக்கு பக்குவமான பத்து டிப்ஸ்;**

* ஒரு குழந்தைக்கு முதன் முதலில் கிடைக்க வேண்டியது முழுமையான அன்பு. குழந்தை கேட்கும் பொருளை வாங்கி கொடுத்தால்தான் அன்பு என்று கிடையாது. குழந்தையை மடியில் அமர வைத்து நல்ல கதைகள் சொல்வது முழுமையான அன்பை அதற்கு கிடைக்கச் செய்யும். இப்படிப்பட்ட பெற்றோரிடம் குழந்தைகள் மிக நெருக்கமாகி விடும். * அடுத்ததாக குழந்தைக்கு நாம் கொடுக்க வேண்டியது நல்ல ஆரோக்கியம். குழந்தை பிறந்தது முதல் அதன் எடையை சரியாக 'மெய்ன்டெய்ன்' செய்து வரவேண்டும். 6 மாதத்திற்கு ஒருமுறை அதன் எடையை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். குழந்தையை ஆரோக்கியமாக வளர்க்க வேண்டும் என்பதற்காக அதிக ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவுப் பொருட்களை அதிக அளவில் திணித்து குண்டு குழந்தைகளாக மாற்றிவிடக் கூடாது.

* மூன்று வயது முதல் நல்ல விஷயங்களை கற்றுக்கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். நகத்தை வெட்டுவது, தலையை சுத்தமாக பேணுவது, உள்ளாடைகள் மற்றும் உடல் அந்தரங்க உறுப்புகளை எப்படி ஆரோக்கியமாக பராமரிப்பது என்று அவர்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். 18 வயது ஆகும்வரை ஒரே டாக்டரிடம் அழைத்துச்

சென்று மருத்துவ ஆலோசனைகளை பெற வேண்டும்.

* அடுத்து முக்கியமானது பணம். பணம் இன்றி இன்றைய வாழ்க்கை முறையே இல்லை. அதனால், பணத்தின் மதிப்பை சின்ன வயதிலேயே குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். நம் குழந்தையுடன் படிக்கும் சக பெரிய இடத்து பிள்ளைகளிடம் பணம் அதிக அளவில் புழங்குகிறது என்பதற்காக நம் குழந்தைக்கும் பணத்தை அள்ளி செலவிடக்கூடாது. வீட்டின் சூழ்நிலையை பக்குவமாக புரிய வைத்து, தேவையற்ற செலவுகளை தவிர்ப்பது நல்லது. 'பாக்கெட் மணி' கொடுத்தால், அந்த பணத்திலும் சேமிக்கும் பழக்கத்தை குழந்தையிடம் உருவாக்க வேண்டும். * குழந்தையுடன் நேரத்தை செலவிடுவதும் முக்கியமானது. குழந்தை என்ன பேசுகிறது என்பதை பெற்றோர் பொறுமையாக அமர்ந்து கேட்க வேண்டும். ஸ்கூல் டீச்சர், பக்கத்து வீட்டுக்காரர்கள் பற்றி குழந்தைகள் சொல்வதையும் ஆர்வமாக கேட்க வேண்டும்.

குழந்தையை வீட்டுக்குள்ளேயே அடைத்து வைத்து வளர்க்கக்கூடாது. அவ்வப்போது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும். தினமும் 'வாக்கிங்' அழைத்துச் செல்வதும் அவசியம்.

*குழந்தைகள் முதன் முதலாக தோல்வியை சந்திக்கும்போது நாம் கவனமாக இருக்க வேண்டும். தோல்வி என்பது வெற்றியின் அடிப்படை என்பதை பக்குவமாக புரிய வைக்க வேண்டும். இதற்காக, அம்மா, அப்பா இருவரும் ஏதாவது ஒரு விளையாட்டு விளையாடி யாரேனும் ஒருவர் தோற்பதுபோல் நடித்து, 'இதெல்லாம் சகஜம். தோல்வியை கண்டு துவளாமல் இருந்தால் அடுத்து வெற்றிதான்' என்பதை உணர்த்த வேண்டும். முக்கியமாக, எதையும் 'டேக் இட் ஈஸி'யாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை குழந்தையின் மனதில் பதிய வைக்க வேண்டும்.

பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பக்குவத்தோடு குழந்தைகளை வளர்க்க வேண்டும். உன்னால் எதுவும் முடியும் என்று சொல்லி சொல்லி வளர்த்தால் குழந்தையிடம் தன்னம்பிக்கை தானாக வளர்ந்துவிடும். பிரச்சினை எப்படி வந்தது? ஏன் வந்தது? அதற்கு என்ன தீர்வு? இந்த மூன்று விஷயங்களையும் தைரியமாக அணுக குழந்தைக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

* குழந்தை மற்றவர்களிடம் பழகும்போது, அவர்கள் எப்படி தன்னிடம் பழகுகிறார்கள் என்பதை புரிந்துகொள்ளும் பக்குவத்தை வளர்க்க வேண்டும். எதிர் பாலினர் தன்னிடம் பேசும்போது, அவர்களது பேச்சு, பார்வை, தொடுதல் போன்றவற்றை ஒரு குழந்தை புரிந்துகொள்ளும் பக்குவத்தை பெறுவதும் அவசியம். மற்றவர்கள் தவறாக நடக்க முயற்சி செய்கிறார்கள் என்பதை எப்படி கண்டறிவது என்பதை சொல்லிக்கொடுக்கவும் தவறி விடக்கூடாது.

* கண்டிப்பு என்பதை குழந்தையிடம் முற்றிலும் தவிர்த்து விட வேண்டும். ஒரு பெற்றோர் தங்களது குழந்தையை அதிகம் கண்டித்தால், அவர்கள் குழந்தையிடம் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள் என்றுதான் அர்த்தம். ஒரு குழந்தை அதன் சக்திக்கு தகுந்தவாறுதான் சிந்திக்கும். அதனால், எந்த சூழ்நிலையிலும் குழந்தையை கட்டாயப்படுத்தக் கூடாது. மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடவும் கூடாது.

மொத்தத்தில், அறிவு, அன்பு, உணவு இந்த மூன்றையும் உங்கள் குழந்தைக்கு எப்பவும் கொடுக்க தயாராக இருங்கள். குழந்தை ஜெயித்தால் பாராட்டுங்கள். தோற்றால் தட்டிக்கொடுங்கள். உங்கள் குழந்தையும் நல்ல குழந்தைதான்! ,,

**தொடரும்...**


**மித்ரா டைம்ஸ்**

**சந்தாதாரர் ஆகுங்கள்!**

சந்தா விபரம்

ஆண்டு சந்தா ரூ.240/– மூன்று ஆண்டு சந்தா ரூ.720/–
5 ஆண்டு சந்தா ரூ.1200/– ஆயுள் சந்தா ரூ.5000/–
புரவலர் சந்தா ரூ.10,000/–

அலுவலக முகவரி

501, சுருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9 சூளைமேடு ஹைரோடு, சென்னை-94
Ph : 044-23743007/8 www.mitratimes.com Watsapp No : 9841843773



# சிங்கார சென்னையை சின்னாபின்னமாக்கிய வர்தா

**திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்தையும் விட்டுவைக்கவில்லை.**

வங்கக் கடலில் உருவான வர்தா புயல் டிசம்பர் 12 ம் தேதி திங்கட்கிழமை சென்னை அருகே கரையை கடந்தது. அப்போது சென்னையில் கனமழை பெய்ததுடன் காற்று மணிக்கு 192 கிலோமீட்டர் வேகத்தில் வீசியது.

வர்தா புயல் கரையை கடந்தது. இந்த புயல் கரையை கடந்த போது மணிக்கு 100 முதல் 110 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2 மணியளவில் வர்தா புயலின் மையப்பகுதி சென்னை அருகே கடக்க தொடங்கியது. முக்கிய சாலைகளில் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தது. இதனால் பல பகுதிகளில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மரங்கள் விழுந்ததால் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் சேதம் அடைந்துள்ளன. சாலையில் விழுந்த மரங்களை அகற்றும் பணியில் தீயணைப்பு படையினர் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். மேலும், சென்னையில் பல இடங்களில் மின் கம்பங்கள் சாய்ந்துள்ளன.





சென்னையின் பல இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. வர்தா புயலின் மையம் மதியம் 3.30 மணிக்கு சென்னை துறைமுகம் அருகே கரையைக் கடந்தது. இதைதொடர்ந்து புயலின் கிழக்குப் பகுதி மாலை 6.30 கரையை கடந்தது.

வர்தா புயலால் தமிழகத்தில் 16 பேர் உயிரிழந்தனர்; 15,000க்கும் மேற்பட்டோர் இடம் பெயர்வுக்கு ஆளாகினர்; ஆயிரக்கணக்கில் மரங்கள் சாய்ந்தன. இந்த நிகழ்விற்கு பின் சென்னையில் பறவைகள் தங்களது உணவுக்காகவும், இருப்பிடத்திற்காகவும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை பற்றி விவாதிக்கப்படவில்லை என்கிறார்கள் சூழலியலாளர்கள்.

புயலில், பறவைகள் இளைப்பாறுவதற்கான மரங்கள், கூடு கட்டுவதற்கான மரங்கள், பழங்கள் கொடுக்கும் மரங்கள் என மூன்று வகையான மரங்கள் சேதமாகியுள்ளன.

புயலால் மரங்களை எழுந்துள்ள சென்னையில் பொதுவாகக் காணப்படும்



காக்கை, புறா,மைனா, புல் புல், கிளி போன்ற பறவையினங்கள் உணவுக்காக சண்டையிடும் நிலை ஏற்படும்.

''தனது இருப்பிடங்கள் காணாமல் போனதால், சென்னையில் மீதமுள்ள பசுமையான இடங்களைத் தேடி பறவைகள் செல்லும். அங்கு ஏற்கனவே உள்ள பறவைகளோடு உணவுக்காக போட்டியிடும். மேலும் பறவைகளின் இனப்பெருக்கம் இதனால் பாதிக்கப்படும்.

மரங்களின் சேதத்திற்கு முக்கிய காரணம் மண்ணுக்கு ஏற்ற மரங்களை விட அலங்கார மரங்களை வளர்த்ததுதான் என்கிறார்கள் தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள்.

மேலும் அரசு மட்டுமல்லாது தனியார் நிறுவனங்களும், தனி நபர்களும் மரம் நடும் விழாக்களின் போது பெரும்பாலும் வெளிநாட்டு மரங்களாகவும் குறிப்பாக அலங்கார மரங்கள் நடப்படுகின்றன. ''நாட்டு வகை மரங்களின் கிளைகள் உடைந்தாலும், மரங்களின் வேர் பிடிப்பு உறுதியாக இருக்கும். அலங்கார வகை மரங்கள் இயற்கைப் பேரழிவு காலங்களில் எளிதில் சாய்ந்துவிடும்.

மரங்களின் இழப்பால் சென்னையில் மாசு அதிகரிக்கும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். ''சுமார் 60 சதவீத பசுமை குறைந்த காரணத்தால், இனி வரும் காலங்களில் சென்னையின் வெப்பம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. காற்று மாசை இலகுவாக சுத்திகரிக்கும் மரங்கள் நாம் இழந்துவிட்டோம். இதனால் காற்று மாசு, கரியமிலவாயு கட்டாயம் அதிகப்படியாக இருக்கும் என்கின்றனர் சூழலியலாளர்கள்.

# கடல் மேல் பிறக்க வைத்தாய்!

இலங்கை சிறையில் வாடிவரும் தமிழக மீனவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது. அவர்களுடைய குடும்பத்தாரும் வருமானத்தை இழந்து பரிதவித்து வருகின்றனர்.

தமிழகத்தின் கடலோர மீனவ மக்களின் வாழ்க்கையில் சோகங்களும் துயரங்களும் தான் அதிகம். குறிப்பாக பாக் ஜலசந்தியில் மீன்பிடிக்கச் செல்லும் நாகப்பட்டினம், ராமநாதபுரம் உள்ளிட்ட 6 மாவட்ட மீனவர்களும் ஒவ்வொரு நாளும் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. மீன்பிடித்துக் கொண்டிருக்கும் மீனவர்களின் மீது தாக்குதல் நடத்துவதும் அவரது படகுகளையும் வாழ்வாதார பொருட்களை சேதப்படுத்துவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மீன் பிடிக்கும் மீனவர்களை அத்துமீறி, இந்திய கடல் எல்லையில் வந்து இலங்கை கடற்படை கைது செய்வது தொடர்பாக மீனவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். குடும்பத்திற்கு



வருமானம் ஈட்டுபவர்களை சிறையில் உள்ள நிலையில், குழந்தைகளை படிக்க வைப்பது பிள்ளைகளை திருமணம் செய்து கொடுப்பது என பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்க்கையை நடத்துவது மிகப்பெரிய போராட்டமாக இருப்பதாக கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.




ஜனவரி 17 எம்.ஜி.ஆர். பிறந்தநாள்

# ஏழைகளின் வள்ளல் எம்.ஜி.ஆர்

தம் இளமைக் காலத்தில் பசிக்கொடுமை எப்படிப் பட்டது என்பதை முழுமையாக உணர்ந்து, துன்புற்ற அனுபவத்தை எப்பொழுதும் மறவாமல் நினைவில் கொண்டிருந்தார்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். தமிழகத்தின் முதல் அமைச்சரானதும், பசிக்கொடுமையால் அவதியுறக் கூடாது. சாப்பிட உணவு கிடைக்கவில்லை என்பதற்காக எந்தக் குழந்தையும் பள்ளிக்கு வாராமல் இருந்துவிடக்கூடாது என்பதற்காக, இந்தியாவில் எந்த ஒரு மாநிலமும் நிறைவேற்றாத முதலமைச்சர் சத்துணவு திட்டத்தை அமல்படுத்தினார்.



ஆரம்பப்பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும் 2 முதல் 14 வயதுக்குட்பட்டவர்கள் மதியம் ஒரு வேளை பள்ளிகளிலேயே சமைத்து வழங்கப்பட்டது.

அதுமட்டுமின்றி, சத்துணவுக் கூடங்களில் உணவு சமைத்து பரிமாற ஆயா வேலையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் அமர்த்தப்பட்டனர். அவர்கள் மாதம் ரூ.100 சம்பளம் பெறவும் வகை செய்யப்பட்டது. பெண்களின் வேலை யில்லாத் திண்டாட்டமும் இதன் மூலம் ஓரளவுக்குக் குறைந்தது; குழந்தைகளின் பசியும் தீர்க்கப்பட்டது. இதற்காக ஆன செலவு ஆண்டுக்கு ரூ.200 கோடியாகும்.மக்கள் மத்தியில் இத்திட்டம் மிகப்பெரும் வரவேற்பை பெற்றது.

தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தால் விளைச்சல் பாதிக்கப்படிருந்த போதிலும் தமிழ் நாட்டில் ரேஷன் கடைகளில் விற்பனை செய்யப்படும் அரிசி விலையை ரூ.1.75 ஆகக் குறைக்க உத்தரவிட்டார். அதனுடன் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 20 கிலோ அரிசியும் வழங்க ஏற்பாடு செய்தார். ஒரு கிலோ அரிசியை இலவசமாகவும் வழங்கவும் ஏற்பாடு செய்தார்.

சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வந்து சென்னை நகர மக்களின் குடிநீர்த் தேவையைப்பூர்த்தி செய்யும் திட்டம் கடந்த பல ஆண்டுகளாகப் பல்வேறு அரசுகளாலும், மக்களாலும் பேசப்பட்டு வந்தது. 1983 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர், ஆந்திர முதல்வர் என்.டி. ராமாராவுடன் கலந்து பேசி நனவாக்கினார். அதற்கான தொடக்க விழாவைப் பிரதமர் இந்திராகாந்தி, என்.டி.ஆர். ஆகியோரை சென்னைக்கு அழைத்து விழாவை நடத்தினார்.

1977-1988 ஆண்டு வரை அவர் ஆட்சி செய்த காலத்தில் விலைவாசி உயராமல் பார்த்துக் கொண்டார். சாதாரணப் பொருட்களைக்கூட வாங்க முடியாத ஏழைகள் சிரமப்படக்கூடாது என்பதற்காகவே அவர் இந்த நடவடிக்கையை எடுத்தார். இதனால் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை சிரமின்றி சீராக நடந்தது. படத்தில் மட்டுமல்ல நிஜத்திலும் இவர் ஏழைகளின் வள்ளல்தான்.

**- மோகன்ராஜ்**

**மித்ரா டைம்ஸ் பிப்ரவரி மாத இதழுடன்...**



தஞ்சை எஸ்.ஜே.கந்தமாறன்

வழங்கும்

**சிறுதொழில் - பெருவளம்**

சாதிக்கத்துடிக்கும்

இளைஞர்களுக்கு வழிகாட்டிப்புத்தகம்!

32 பக்க இணைப்புப் புத்தகம் வெளிவருகிறது.
உங்கள் பிரதிக்கு முன்கூட்டியே ஏஜெண்டிடம்
சொல்லி வையுங்கள்.

# கை வண்ணம்






**S. JANAKI**
STD IX-A,
GOOD SHEPHERED M.H.S. SCHOOL
CHENNAI

# பொங்கலோ பொங்கல்





உலகத் தமிழர்கள் ஒருமித்து, ஒரே மாதிரி கொண்டாடும் ஒரே திருவிழா பொங்கல் திருநாள் எனப்படும் உழவர் திருநாளாகும். பொங்கல் பண்டிகைக்கு விசேஷம் ஒன்று உண்டு. சூரிய பகவான், தை மாதத்திலிருந்து ஆனி மாதம் வரை ஆறு மாதங்களுக்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பயணிக்கிறார்.

இதை உத்தராயண காலம் என்பார்கள். அதேபோல ஆடி முதல் மார்கழி வரை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி பயணமாகிறார். இதை தட்சிணாயணம் என்பார்கள். இந்த உத்தராயண காலத்தின் தொடக்கத்தை ஆதி காலத்தில் இந்திர விழாவாகக் கொண்டாடியிருக்கிறார்கள். அதுதான் இன்றைய பொங்கல் விழா. இந்திர விழா அக்காலத்தில் கிட்டத்தட்ட 28 நாட்களுக்கு கொண்டாடப்பட்டதாம். இந்திரனுக்கான விழாவாக இது கொண்டாடப்பட்டுள்ளது.

இதனால்தான் இந்த விழாவின் முக்கிய அம்சமாக, இந்திரனின் கரும்பு வில்லை நினைவு கூரும் விதமாக கரும்பு பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. உத்தராயண காலத்தின் தொடக்க நாட்களை போகிப் பண்டிகை, பொங்கல் பண்டிகை, உழவர் திருநாள் (மாட்டுப் பொங்கல்) என கொண்டாடுகிறார்கள் இப்போது. தற்போது காணும் பொங்கலும் கடைசி நாள் விழாவாக இணைந்துள்ளது. அதைப் பற்றிக் காண்போம்...

**போகி:**

போகிப் பண்டிகை மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது. போக்கி என்பதுதான் மருவி, போகி என்றாகி விட்டது. அதாவது பழைய கழிதலும், புதியன புகுதலும் என்ற அடிப்படை இது. அசுத்தங்களைப் போக்கி சுத்தத்தை வரவேற்பது எனபது இந்தப் பண்டிகையின் உண்மையான பொருள். அசுத்தம் என்பது வீட்டில் மட்டுமல்லாது நமது மனதிலும் உள்ள அசுத்தங்களைப் போக்குவது, துயரங்கள், துன்பங்கள், கவலைகளைப் போக்குவது என்றும் பொருளாகும். போகிப் பண்டிகை பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடப்படுகிறது.

அன்றைய தினம், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள் தேவையற்ற பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும் இதையொட்டியே



பொங்கலுக்கு முன் வீட்டிற்கு புது வர்ணம் பூசி வீட்டை அழகு படுத்துகிறார்கள். பொங்கல் சமயத்தில் வீடு புதுப் பொலிவுடன் காணப்படும். இது கிராமங்களில் பொங்கல் சமயத்தில் காணக் கிடைக்கும் இனிய காட்சியாகும். வீட்டின் வாசலில் மாக்கோலமிட்டு வாசலில் மாவிலை கட்டி பூஜைகள் செய்து இறைவனை வழிபடுவர். அது மட்டுமில்லாது, வீடுகளிலும் அரிசிக்கோலம், பெயிண்டுகளால் கோலமிட்டு அழகுபடுத்துவது தமிழர் பண்பாடு. போகிப் பண்டிகையின் போது போளி, வடை, பாயசம் போன்றவை இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும். பொங்கல் பண்டிகை: இந்தப் பண்டிகை சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும் பண்டிகையாகும்.

**பொங்கல்**

பொங்கும் மங்கலம் எங்கும் தங்கிட தமிழகத்தில் அனைவரும் கொண்டாடும் பண்டிகை பொங்கல்.

தை மாதம் 1ம் தேதி, (ஜனவரி மாதம் 14ம் தேதி) கொண்டாடப்படும். வீட்டில் சூரியன் ரதத்தில் வருவது போல் கோலமிட்டு, மாவிலை தோரணங்கள் கட்டி வீட்டை அலங்கரிப்பார்கள். பொங்கலுக்கு தமிழர் திருநாள் என்பதைப் போல் உழவர் திருநாள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பதற்கேற்ப, உழவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. உழவர்கள் இந்தப் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவார்கள்.

வருடம் முழுவதும் வயலில் வியர்வை சிந்த உழைத்த உழவர்கள் பகலவனுக்கு நன்றிதெரிவிக்கும் விதமாக இந்த பண்டிகையை கொண்டாடுகிறார்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் இது ஆன்றோர் வாக்கு. தை திருநாளில் இது வரை இருந்து வந்த துன்பங்கள் நீங்கி நல்வழி பிறக்கும் என்றநம்பிக்கையோடு இந்த பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பொங்கல் தினத்தன்று அடுப்பில் பொங்கல் பானை வைக்கப்பட்டு (முன் காலத்தில் மண்பானை உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. அதன் பின் வெண்கலத்தால் செய்யப்பட்ட பானை உபயோகப்படுத்தப்பட்டது. இப்போது அதுவும் போய் பெரும்பாலான இடங்களில் குக்கரே பயன்படுத்தப்படுகிறது) அதற்கு பொட்டு வைத்து, பானையைச் சுற்றி மஞ்சள் கட்டி அதில் பால் ஊற்றி சூடு படுத்தப்படும்.

பால் பொங்கி வந்ததும் குடும்பத்தினர் அனைவரும் பொங்கலோ பொங்கல் என கூறிபொங்கலை வரவேற்பர். தை மாதம் பிறக்கும் போது பொங்கல் பானை வைக்கப்படுவது தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும். சில சமயம் மாதம் அதிகாலை பிறக்கும். மாதப் பிறப்பு என்பது காலை மாலை இரவு ஆகிய ஏதோ ஒரு வேளையில் நிகழும். மாதம் பிறக்கும் நேரப்படி பொங்கல் பானை வைக்கப்படும். பொங்கலின் சிறப்பமசம் கரும்பும், மஞ்சள் கொத்தும். பொங்கலன்று பால் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் ஆகியவை தயாரிக்கப்பட்டு சூரியனுக்கு நிவேதனம் செய்யப்படும்.

கரும்பும் நிவேதனப் பொருளில் முக்கிய இடம் பெறுகிறது. சூரியனுக்கு நிவேதனம் என்பதால் வீட்டின் மாடியிலோ அல்லது திறந்த வெளி பகுதியிலோ தேரில் சூரியன் வருவது போல் கோலமிட்டு அதற்கு அருகில்நிவேதனப் பொருட்கள் வைக்கப்பட்டு சூரியனுக்கு பூஜையும், நிவேதனமும் நடைபெறும். பொங்கல் தினத்தை முன்னிட்டு கோவில்களில் சிறப்பு பூஜை நடைபெறும். மக்கள் புத்தாடை அணிந்து பொங்கலை கொண்டாடுவார்கள்.

**மாட்டுப் பொங்கல்:**

இதுவும் உழவர்கள் நன்றி தெரிவிக்கும் பண்டிகைதான். உழவர்கள் ஆண்டு முழுவதும் தங்களுக்காக உழைத்த மாடுகளுக்கு நன்றி தெரிவித்து அவற்றைகும்பிட்டு பூஜை செய்யும் நாள். வீட்டிலுள்ள பசு, காளை மாடுகளை குளிப்பாட்டி கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி அவற்றிற்கு மாலையிட்டு, மஞ்சள் குங்குமம்



இட்டு அவற்றை பூஜைசெய்வர். அன்று, காளை மாடுகளின் கொம்புகள் புதுப்பொலிவு பெறும். மாடுகள் அழகாக அலங்கரிக்கப்பட்டு அவற்றின் கழுத்தில் சலங்கைகள் கட்டப்பட்டு அவை ஊர்வலமாக அழைத்து வருவர்.

அவை தாள கதியுடன் ஜல்ஜல் என்ற ஒலியுடன் வருவது காணக் கிடைத்தற்கரிய காட்சியாகும். தமிழகத்தில் பல பகுதிகளில் கணு என்ற பெயரில் பொங்கலுக்கு அடுத்த நாள் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக பிராமணர் வீடுகளில் கணு கொண்டாடப்படும். முதல் நாள் செய்த பொங்கலுடன், சாதத்தில் குங்குமம், மஞ்சள் போன்றவை சேர்க்கப்பட்டு பல வண்ணங்களில் சாதம் செய்யப்பட்டு அவை பறவைகளுக்குபடைக்கப்படும்.



பெண்கள், தங்களது சகோதரர்கள் நலமுடன் இருக்க வேண்டும் என்பதற்காக இறைவனை பிரார்த்திக்கும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. பொங்கலுக்கு சகோதரர்கள் தங்கள் சகோதரிகளுக்கு அரிசி, பருப்பு,பணம் ஆகியவற்றை பொங்கல் சீராக கொடுப்பதும் நடந்து வருகிறது. அக்காலத்தில்அறுவடை முடிந்த பின் தங்கள் சகோதரிகளுக்கு பிறந்த வீட்டு சீராக நிலத்தில் விளைந்த அரிசி, பருப்பு போன்றவற்றை கொடுத்து தங்கள் மகிழ்ச்சியைபகிர்ந்து கொண்டார்கள். இப்போதும் இந்த பழக்கம் இருந்து வருகிறது.

**திருவள்ளுவர் தினம்:**

இதே தினத்தன்று திருவள்ளுவர் தினமும் கொண்டாடப்படும். ஒன்றரை அடிகளில் வாழ்வியலுக்கு தேவையான வழிகளை போதித்தவர் திருவள்ளுவர். அணுவைத் துளைத்து அதில் ஏழ் கடலை புகுத்தி குறுகத் தரித்த குறள் என்று புகழப்பட்டது திருக்குறள். 133 அதிகாரங்ளில் ஒரு அதிகாரத்திற்கு 10 குறள்கள் வீதம் 1330 குறள்களை எழுதியுள்ளார் திருவள்ளுவர்.

அதை அறத்துப் பால், பொருட் பால், காமத்துப்பால் என மூன்றாக பிரித்து முக்கனியின் சுவையைப் போல், முத்தமிழின் சுவையைப் போல் தமிழர்களுக்கு மட்டுமல்லாது, உலகுக்கே விருந்தளித்துள்ளார் வள்ளுவர். திருக்குறள் கிட்டத்தட்ட உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது என்பது இதன் சிறப்புக்கு மேலும் சிறப்பு சேர்ப்பதாகும். ஜனவரி மாதம் 15ம் தேதி தமிழகத்தில் திருவள்ளுவர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**காணும் பொங்கல்:**

பொங்கல் கொண்டாட்டத்தின் கடைசி நாள் நிகழ்வு காணும் பொங்கல். உற்றார் உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்டோரைக் கண்டு இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்வது இதன் நோக்கம். இந்தக் காணும் பொங்கல் சமீப காலம் மிகவும் உற்சாகத்துடன் ஒரு சுற்றுலா உணர்வுடன் கொண்டாடப்பட்டு வருகிறது. பொங்கும் மங்கலம் என்றும் தங்கட்டும் எங்கும் தங்கட்டும்!

# தான்தோன்றீஸ்வரர்-அறம் வளர்த்த அம்மை திருக்கோயில்-சேலம்



சேலம் மாவட்டம் பேளூர் வேள்வியூர் 1000 வருடங்களுக்கு முன் பழமை வாய்ந்த தான்தோன்றீஸ்வரர் - அறம் வளர்த்த அம்மை திருக்கோயில் அமைந்துள்ளது.

அர்ச்சுனன் தமிழகத்தில் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு, இங்குள்ள தீர்த்த மலைக்கு வந்துள்ளான். சிவபெருமான் மீது பக்தி கொண்டு சிவபூஜை செய்தான். பின்னர், திருமாலும் சிவபெருமானை நினைத்து,"உனது பாணத்தை இப்பகுதியில் செலுத்துவாயாக" என்றார். சிவனை நினைத்து அர்ச்சுனனும் பிறைவடிவமானதொரு பாணத்தை மலையடிவாரத்தில் செலுத்த, சிவன் மகிழ்ச்சி அடைந்து தன் கட்டுப்பாட்டில் உள்ள கங்கை நதியின் பத்தில் ஒரு பகுதி அந்த அம்பு பாய்ந்த இடத்திலிருந்து பெருகுமாறு செய்தார். சிவன் தனது சடைக்கற்றையிலிருந்து கங்கையை வெளிப்படச் செய்தார். அந்த நீர் வெண்மை பிரவாகமாக தோன்றியது. இந்நதியே வெள்ளாறு எனப் பெயர் பெற்றது. இத்தலத்துக்கு பெருமை சேர்க்கும் வசிஷ்ட மாமுனி, சிவனருள் பெற்று இங்கு தங்கி வேள்வி செய்தார் என்று வரலாறு கூறுகிறது. மா, பலா, இலுப்பை மரங்கள் மூன்றும் ஒரே மரமாக இருப்பது இத்தலத்தின் அதிசயம். தான்தோன்றீசுவரர் வழிபாட்டிற்காக அவ்வாலயத்தில் பலாமரம் ஒன்றை வசிட்டர் உண்டாக்கினார். இம்மரத்திற்காக கோயில் கட்டப்படும் காலத்திலேயே மூடுகற்களில் வளைவுகள் வெட்டி ஒதுக்கப்பட்டிருப்பதை பார்க்கையில் இம்மரம் ஆலயத்திற்கு முற்பட்டதெனத் தெரியவரும். வசிஷ்ட மாமுனி யாகம் செய்ய வேண்டி பரமசிவனை வேண்ட, சிவன் விரும்பிய வண்ணம் இத்தலத்தில் வசிஷ்ட முனிவர் தங்கினார். வசிஷ்டர் செய்த யாக பூமியில் உள்ள திருமண்ணே இன்றும் கோயிலில் திருநீறாக வழங்கப்படுகிறது. வசிஷ்ட முனிவரது யாகசாலையில் உண்டாக்கிய விபூதியானது மேனியில் பட்டால் செல்வம் பெருகும்.



சித்திரை 3ம் தேதியிலிருந்து 10ஆம் தேதி வரை சுவாமி மீது சூரியன் ஒளி படுவது சிறப்பு. ஒரே கல்லிலான குதிரை வாகனம் இத்தலத்தில் உள்ளது. 3 சூலாயுதம் போல் சுவாமி, அம்பாள் இருவரும் சேர்ந்து இருப்பது சிறப்பு. யாழி வாய்க்குள் உருண்டைக்கல் உருள்வது போல் உள்ள சிற்பம் இங்கு உள்ளது, வன்னி மரத்தடியில் சனீஸ்வர பகவான் உள்ளார்.

ஆடி பதினெட்டு, கார்த்திகை, அமாவாசை, பிரதோஷம் உள்ளிட்ட நாட்களில் விழாக்கள் நடைபெறும்.

இத்தலத்தில் உள்ள கல்யாண விநாயகருக்கு மாலை, தேங்காய், பழம், கடலை, சர்க்கரை வைத்து அர்ச்சனை செய்து மாலையைக் கழுத்தில் போட்டால் கல்யாண பாக்கியம் கைகூடும். மனமுருக வேண்டிக்கொண்டால் கல்யாணபாக்கியம், குழந்தை பாக்கியம் ஆகியவை கைகூடுகின்றன. தவிர உத்தியோக உயர்வு, விவசாயச் செழிப்பு , கல்வி, செல்வம், ஞானம் ஆகியவை இத்தலத்து இறைவனை வணங்கினால் கிடைக்கும் என்று பக்தர்கள் தெரிவிக்கிறார்கள். தவிர மனநிம்மதி வேண்டுவோர் இத்தலத்துக்கு பெருமளவில் வருகின்றனர்.

சுவாமி அம்பாள் ஆகியோருக்கு புத்தாடை சேலை படைக்கின்றனர். சுவாமிக்கு பால், எண்ணெய், இளநீர் ஆகியவற்றால் அபிசேகம் செய்யலாம். விரதம் இருத்தல், தானதருமம் செய்தல் ஆகியவை இத்தலத்தில் செய்தால் புண்ணியம் கிடைக்கும். தவிர வழக்கமான அபிசேக ஆராதனைகளும் செய்யலாம். கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் படைக்கலாம். சுவாமிக்கு நைவேத்தியம் செய்து பிரசாதம் கொடுக்கலாம்.

**- சேலம் மாதேஸ்வரன்**



# சிலிண்டர் எச்சரிக்கை

தனது திருமணத்திற்காக எடுத்த விடுமுறைகள் முடிந்து, தனது காவல் நிலையத்திற்கு சென்று மகிழ்ச்சியுடன் வேலை செய்ய தொடங்கினார் அந்த சப் இன்ஸ்பெக்டர். காவல்நிலையத்திற்கு அருகே வீடு, இனி சரியான வேளையில், சரியான உணவை உண்ணலாம் என கனவில் மிதந்து கொண்டு இருக்கிற வேளையில், அவன் முன் இருந்த போன் அலற தொடங்கியது.

போனை எடுத்த சில நொடிகளில், பதற்றத்துடன் " உடனே அந்த இடத்துக்கு வந்துரேன் " எனக் கூறி இணைப்பினை துண்டித்து, உடனே தடயவியல் நிபுணர் குழுவிற்கு தகவல் தெரிவித்தார். அடுத்த 10 நிமிடத்தில் தீ சூழ்ந்த அந்த இடத்தை காவல் குழுவினரும், தடயவியல் நிபுணர் குழுவினரும் அடைந்த போது, அங்கே தீயணைப்பு வீரர்கள், தீயை அணைக்க போராடி கொண்டு இருந்தனர். சைரன் ஒலியுடன், ஆம்புலன்ஸ் தயார் நிலையில் இருந்தது. சில நிமிட போரட்டத்திற்கு பிறகு அந்த வீட்டில் எரிந்த தீ அணைக்கப்பட்ட உடன், சப் இன்ஸ்பெக்டர், தடயவியல் நிபுணர் குழுவுடன், புகை மண்டலத்துடன், நிசப்தமாக இருந்த வீட்டினுள் நுழைந்தார்.

வீட்டினுள் யாரேனும் உள்ளனரா என கவனமாக பார்த்து கொண்டு இருக்கும் வேளையில், சமையலறை பகுதியில் இருந்து," என்னங்க, என்னங்க " என மெல்லிய குரல் கேட்க தொடங்கியது. பதற்றத்துடன் சப் இன்ஸ்பெக்டர், சமையல் அறை பகுதியை அடைந்ததும், அவரின் கை கால்கள் நடுங்கியது. முழுவதும் தீயினால் பாதிக்கப்பட்டு, உயிரிழந்த கணவனின் உடலருகே, 90% தீயினால் பாதிக்கப்பட்ட மனைவி, கணவனை அழைத்தவாறு கிடந்தாள். அடுத்த சில நொடிகளிலே, இருவரும் ஆம்புலன்சில் ஏற்றப்பட்டனர். அவர்களுடன் சப் இன்ஸ்பெக்டரும், ஆம்புலன்சில் ஏறினார். வாழ்வில் முதல் முறையாக, ஒருவர், உயிருக்கு போராடுவதை காண முடியாமல் தவித்தார். காவல் துறை வழக்கப்படி, வாக்குமூலம் பெற வேண்டிய கட்டாயத்தில், மனவேதனையுடன், உயிருக்கு போராடி கொண்டு இருந்த பெண்ணிடம், தீ விபத்து எப்படி நடந்தது, என கேட்க தொடங்கினார்.

அதற்கு அப்பெண், " எங்களுக்கு கல்யாணம் ஆகி மூன்று மாதம் தான் ஆகுது. நேத்து தான் இந்த வீட்டுக்கு குடி வந்தோம். நேத்து பால் காச்சுன போது, எதிர்பாரத விதமா,





சூடான பால் என் கையில கொட்டிடுச்சு. எனக்கு சிரமம் கொடுக்க வேணாம்னு நெனச்ச என் கணவர், இன்னைக்கு சமையல, அவரே பண்ணுறேனு சொன்னாரு. நான் சமையலுக்கு தேவையான பொருள்களை வாங்கிட்டு வீட்டுக்குள்ள நூழையறப்ப தான் அந்த கோர சம்பவம் என் கண் முன்னாடி நடந்துச்சு. பெரிய வெடி சத்தத்துடன் வந்த தீ, என் கணவர் மேல பட்டு எரிய ஆரம்பிச்சு. நான் அவர காப்பாத்த போனப்ப, என் மேலயும் தீ பரவிடுச்சு. எங்க வீட்டுல இருந்த கேஸ் ஸ்டவ்வு, கேஸ் ட்யூபு, ரெகுலேட்டரு எல்லாமே புதுசு தான். எல்லாமே சரியா இருந்தும் எப்படி வெடிச்சதுனு தெரியல. தயவு செஞ்சி என்னைய காப்பாத்திடாதீங்க. "என கூறிய சில நிமிடங்களில், அவள் தன்னுடைய கணவனைப் போலவே இறந்து போனாள். ஆம்புலன்ஸ் மருத்துவமனையை அடைந்தது. விபத்து தொடர்பாக, உயர் அதிகாரியை சந்திக்க, காவல் நிலையம் வந்த போது, சப் இன்ஸ்பெக்டர் மொபைலுக்கு, தடயவியல் நிபுணரிடம் இருந்து போன் கால் வந்தது. போனில் தடயவியல் நிபுணர், விபத்துக்கான காரணம் கண்டறியப்பட்டதையும், எவ்வாறு நடந்தது என விவரித்ததும் பீதியுற்றார்.

காலண்டரில் தேதியைப் பார்த்தார். 10, அக்டோபர், 2016. உடனே தனது மனைவிக்கு கால் செய்தார். அவள் போனினை எடுக்கவில்லை. பதற்றத்துடன் வீட்டை நோக்கி ஓடினார்.

வீட்டை அடைந்ததும், சமையலறைக்குள் வேகமாக சென்று, சிலிண்டரின் மேல் பகுதியினை பார்த்தார். அதில் B16 என எழுதப்பட்டு இருந்தது. உடனே, அந்த சிலிண்டரை அப்புறப்படுத்தி, சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம், போன் செய்து, காலாவதியான சிலிண்டரை திரும்ப பெற்று கொள்ளுமாறு கூறி நிம்மதி அடைந்தார்.

நம் வீட்டில் உபயோகிக்கும் சிலிண்டர்களுக்கு Expiry Date உள்ளது. அது cylinder body ஐயும், Top ring பகுதியையும் இணைக்கும் மூன்று Metal strip இல், ஏதாவது ஒன்றில், உட்புறமாக, A to D எழுத்தில், ஏதேனும் ஒரு எழுத்தில், ஏதாவது ஒரு எண்ணுடன் சேர்க்கப்பட்டு, பெயின்டில் எழுதப்பட்டிருக்கும்.

அதை புரிந்து கொள்ளும் முறை.

A - January to March

B - April to June

C - July to September

D - October to December

எண்கள் வருடத்தை குறிக்கும்

B16 என்றால் June, 2016 கழித்து அந்த சிலிண்டரை நாம் உபயோகிக்க கூடாது.

ஒரு வேளை காலாவதியான கேஸ் சிலிண்டரை உபயோகித்தால், அந்த சிலிண்டரில் இருந்து, எந்த நேரத்திலும், கேஸ் கசிவு ஏற்பட்டு, நம் உயிரை அது பறிக்கும். கேஸ் சிலிண்டர் வாங்கும் போது Expiry date ஐ சரி பார்த்து வாங்கினால், சமையல் மட்டும் அல்ல , நமது வாழ்க்கையும் இனிமையாக அமையும்.

(இன்றே உங்களது வீட்டில் உள்ள சிலிண்டரின் Expiry Date – ஐ சரி பார்த்துக் கொள்ளவும்) உயிர் காக்கும் இந்த தகவலை மற்றவர்களுக்கும் சொல்லி அவர்களின் உயிரையும் காப்பாற்றுங்கள்!

**- திருமதி சுஜாதா மூர்த்தி**

# எல்லோருக்கும் ஏற்றதைச் செய்யும்

## சமூக நல்லிணக்கக் காவலர்

# திண்டுக்கல் காஜாமைதீன்



மற்றவர்களுக்கு பயன்படும் வகையில் பணியாற்றுபவரை சமுதாயம் எந்தக் கணத்திலும் தலையில் தூக்கி வைத்து ஆடும். தான் உண்டு தன் குடும்பம் சொந்தபந்தம் உண்டு என்று மட்டுமே வாழ்பவர்களால் மற்றவர்களுக்கு எந்தப்பயனும் இல்லை. அந்த வகையில் திண்டுக்கல் நகரில் சிறப்பாக செயல்பட்டு வரும் சமுதாயச் செம்மல் என்று அனைவராலும் பாராட்டபப்பட்டு வரும் நாட்டாமை காஜாமைதீன் அவர்களை நமது மித்ரா டைம்ஸ் இதழ் சார்பில் பேட்டி கண்டோம்.

**ஆளுநரிடம் விருது பெற்றீர்களே அந்த அனுபவம்!**

எங்கள் திண்டுக்கல் நகர மக்களின் குணம் எது என்றால் எவர் மக்கள் பணியாற்றுகிறார்களோ அவர்களை வாழ்த்துவர். அந்த வகையில் என்னுடைய சேவையை பாராட்டி "சமூக நல்லிணக்க சாதனையாளர் விருது" க்கு பரிந்துரைக்கப்பட்டு சென்னையில் நடந்த விழாவில் ஆளுநர் வித்யாசாகர் ராவ் அவர்களின் பாராட்டுப் பெற்று விருது பெற்றேன்.

**என்ன மாதிரியான சேவைகளை செய்துள்ளீர்கள்?**

சமுதாயத்தின் தீமைக்கு அடிப்படை வறுமை, வேலையின்மை, சாதி மத வேறுபாடு ஆகியவைதான். எனவேதான் வறுமையை ஒழிக்கும்விதமாக பல்வேறு தரப்பட்ட மக்களுக்கு அவர்கள் வாழ்வாதாரத்துக்கு உதவிடும் வகையில் பணியாற்றியிருக்கிறேன். குறிப்பாக அடித்தட்டு மக்களின் அடிப்படை வசதிகளுக்கு என்னுடைய வசதிக்கு ஏற்றவாறு செய்து கொடுத்துள்ளேன்.

**ஏதேனும் அமைப்பில் இருக்கிறீர்களா?**


திண்டுக்கல் லயன்ஸ் கிளப்பில் உள்ளேன். அதில் உள்ள முக்கிய நிர்வாகிகளுடன் இணைந்து இரத்த தான முகாம், மாற்று திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்குவது ஆகிய சமூக நலத்திட்டப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயலாற்றி வருகிறோம்.


உங்கள் பணி சிறக்கவும், தொடரவும் மித்ரா டைம்ஸ் சார்பில் பாராட்டினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மித்ரா டைம்ஸ் வாசகர்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பண்டிகைக்கால நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். என்றார் காஜாமைதீன் சிரித்தபடி.

**- திண்டுக்கல் முபாரக்**

# இலக்கிய ஆய்வாளர்களை வரவேற்கும் இரமணன்





'உலகத் தமிழ் இதழ்களின் ஆய்வு மையம்' என்ற அமைப்பை ஆரம்பித்து நடத்தி வருகிறார் கவிஞர் தேசூர் இரமணன்.

கடநத் 15 ஆண்டுகளுக்கு மேலாக உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் வெளியாகும் தமிழ் பருவ இதழ்களை சேகரித்து வருகிறார். இதில் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் தென்றல், யு.கே.விலிருந்து வெளிவரும் லண்டன் முரசு, சோவியத்து நாட்டிலிருந்து வெளிவரும் கல்பனா உட்பட அனைத்து இதழ்களும் இதில் அடங்கும். வெளியில் கிடைக்காத சில நிறுவனங்களுக்குள்ளேயே வெளிவரும் 'ஹோம் ஜேர்னல்' மற்றும் விழி இழந்தோருக்குரிய நூல்களும் இவருடைய நூல் நிலையத்தில் கிடைக்கும்.

1909 ஆம் ஆண்டின் முதல் இதழான 'பைசா தமிழன்' கணக்கிட்டுப் பார்த்தால், 104 ஆண்டு காலப் பழமை வாய்ந்த இதழ்கள் இடம் பிடித்திருக்கிறது. சுமார் 7000 பத்திரிக்கைகள் உள்ள இந்த நூலகம் எம்.ஃபில்., பி.எச்.டி மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கு பயன் தருகிறது. இந்த சாதனை 'லிம்கா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' 2005 இல் பதிவாகியுள்ளது.



"தமிழ் இலக்கிய ஆய்வாளர்களும் முனைவர் பட்டத்திற்குத் தேவையான ஆதாரங்களை தேடுபவர்களும், வாகர் களும் இந்த நூலகத்திற்கு வருகைதந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே என் ஆசை" என்கிறார் தேசூர் இரமணன்.

**இரமணன் எழுதிய கவிதை**
**என் தாயே அழகு**

ஈர வறட்டியை
நெருப்பு மூட்டியும்
பச்சை நெல்லை உரித்தும்
பதமில்லாத அரிசியில் உணவு சமைத்தும்-நீ
பரிமாறியதே அழகுதான்.
சோற்றை மட்டும் பிள்ளைகளுக்கு
கொடுத்துவிட்டு, தான் உண்ண கஞ்சித் தண்ணியில்
கைவிட்டு பருக்கைகளை தேடும்
உன் அழகே அழகுதான்.

ஒன்றை மட்டும்
எங்களுக்குத் தராமல் -நீயே
மென்று மென்று தின்பாய்!'-அது
உன் சுருக்குப் பையில் இருக்கும்
வெற்றிலைப்பாக்கு!
அதை மெல்லுவதே
உன் அழகுதான்!

உன்னோடு வரும்போது
மழை வரும்- அப்போது
உன் முந்தானையே
எனக்குக் குடையாகும்.
அந்த குடையே
உன் அழகுதான்!

எத்தனை பிள்ளைகள்
இருந்தாலும் - அதில்
ஒன்பது பிள்ளைகளில்
பெண்பிள்ளையென்றும்
ஆண்பிள்ளையென்றும்
பேதம் பார்க்காத - அந்த
அரவணைப்பே உன் அழகுதான்!

# எம் பதில்கள்

**"திருநாவுக்கரசர் திரும்பவும் அ.தி.மு.க.வுக்கு போயிடுவாருன்னு பி.ஜே.பி.யின் முன்னணி தலைவர் ஹெச். ராஜா சொல்லியிருக்கிறாரே?**



ஜெயலலிதா மறைவுக்கு பின்னாடி அ.தி.மு.க.வை வழிநடத்த தலைமை தாங்க ஒரு வெற்றிடம் ஏற்பட்டபோது "அ.தி.மு.க.விலே தொடர்ந்து இருந்திருந்தால் நான் தான் தலைவராகியிருப்பேன்" னு திருநாவுக்கரசர் சொன்னதாக வந்த செய்தியின் அடிப்படையில் திரும்பவும் திருநாவுக்கரசர் அ.தி.மு.க.விற்கு போக வாய்ப்பிருக்கிறது என்று ஹெச். ராஜா கருத்து தெரிவித்திருக்கிறார்.

**அ.தி.மு.க. பொதுக்குழு எப்படி நடந்தது?**

மேடையில் ஜெயலலிதா படத்தை வைத்து மலர்தூவி அஞ்சலி செலுத்தி நடந்தது. தமிழகம் முழுவதிலுமிருந்து 2700 பேர் பங்கேற்றனர். பாதுகாப்பு கச்சிதம். மற்ற ஏற்பாடுகள் பிரமாதம் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள்.

**ராம்மோகன் ராவ் ஆவேசமாக பேட்டி கொடுத்திருக்கிறாரே?**

அவர் தொலைக்காட்சிக்கு அளித்த

**மீனவர்கள் தமிழிசைக்கு எதிராக போர்க்குரலை எழுப்பியிருக்காங்களே?**

சுனாமியின் 12வது ஆண்டு நினைவு தினத்தில் பேசிய பி.ஜே.பி. தமிழக தலைவர் "மீனவர்களுக்கு தனி அமைச்சகம் தேவையில்லை" ன்னு சொன்னாங்க. பி.ஜே.பி. தேர்தல் அறிக்கையில சொல்லிட்டு இப்போ இந்த மாதிரி பேசலாமான்னு கண்டனக் குரலை மீனவ அமைப்புகள் எழுப்பி வருகின்றனர்.






பேட்டியில் சொன்ன சில கருத்துக்கள் பூமராங் மாதிரி அவர் மேல பாய்ந்துவிட்டது. அவர் சொன்ன சில விஷயங்கள் பலருக்கு ஆச்சிரியத்தையும் அதிர்ச்சியையும் தந்தது. உதாரணத்துக்கு புரட்சித்தலைவி அம்மா சொல்படியே செய்தேன். அவரிருந்திருந்தால் இவ்வாறு நடந்திருக்குமா?

**தலைமைச் செயலகத்துக்கு மத்திய பாதுகாப்பு படை வந்தபோது அதை தடுக்கும் தைரியம் தமிழக அரசுக்கு இல்லாது போனது ஏன்?**

என் உயிருக்கு ஆபத்து.

மத்திய அரசு பழிவாங்குகிறது.






சர்ச் வாரண்டில் என் பெயர் இல்லை. என் மகன் விவேக் பெயர் தான் இருந்தது. அவன் என்னோடு இல்லை. 9 வருடங்களுக்கு முன்பே வெளியே சென்று விட்டார்.

என்கிற மாதிரியான இந்த பதில்கள் அவரை மடக்குவதற்கு வருமான வரித்துறை யினருக்கு கிடைத்த 'அல்வா'.

**மருத்துவ மனையிலிருந்து கலைஞர் வீடு திரும்பிட்டாரே?**

'திரும்ப வந்துட்டேன்னு சொல்லு' என்ற கபாலி வசனத்தை சொல்லி அவர்களின் தொண்டர்கள் கலாய்க்கிறார்கள். மேலும் அலகு குத்தாமல் 'தீச்சட்டி ஏந்தாமல்', 'மண்சோறு சாப்பிடாமல்', 'மொட்டை அடிக்காமல்' 'கோவில் அபிஷேகம் ஆராதனை' என்று எதுவும் இல்லாமல் எங்கள் தலைவர் வந்துட்டாரு பாத்தீங்களா? என்று உடன்பிறப்புகள் கலாய்க்குறாங்க. ஆனாலும் "என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே" என்று கலைஞர் வாயால் வராதா என்று தவிர்கிறார்கள்.

**ஸ்டாலின் தலைவராகிறாரே?**

வரும் ஜனவரி 4ந்தேதி நடைபெறவுள்ள தி.மு.க. பொதுக்குழுவில் அவர் செயல் தலைவராக தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார். வாழ்த்துக்கள் தளபதி.




# வெல்டன் சிவா... சிவகார்த்திகேயனை பாராட்டிய நயன்தாரா

எம். ராஜா இயக்கத்தில் நயன்தாராவுடன் சிவகார்த்திகேயன் ஜோடி சேர்கிறார். சீனியர் நடிகை என்பதால் படபடப்பாக இருந்திருக்கிறார் சிவா... முதல் ஷாட்டில் அவரது நடிப்பை பார்த்து வியந்து போன நயன்தாரா "எக்ஸலண்ட் சிவா.... அபாரமான நடிப்பு" என்று மனம் திறந்து பாராட்டினாராம்.

**அம்மணி எல்லா ஹீரோக்களையும் பாராட்டுவாங்க...**

# விஜய் செலுத்திய உண்மையான அஞ்சலி

இளைய தளபதி விஜய் நடித்த தலைவா படத்திற்கு ஏற்பட்ட பிரச்சனையால் அ.தி.மு.க.விற்கு எதிரான மனநிலையில் அவர் இருப்பதாக செய்தி வந்தது. ஆனால் முதலமைச்சர் மரணத்தின்போது அதிர்ச்சி அடைந்த விஜய் அவரது வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தப்போகும் பைரவா படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவை ரத்து செய்ய சொல்லிவிட்டார்.



எந்த வித ஆடம்பரமும் இல்லாமல் ஆடியோ வெளிவரும்படி ஏற்பாடு பண்ண சொல்லிவிட்டார்.

**சூப்பர் "தலைவா"...**

## அரவிந்தசாமி அப்படிபட்டவரல்ல...

ஜெயம் ரவி, அரவிந்த்சாமி கூட்டணியில் வெற்றி பெற்ற தனியொருவன் அடுத்து போகனில் இணைகிறார்கள். பிரபுதேவா தயாரிக்கும் இந்தப் படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவுக்கு அரவிந்த்சாமி வரவில்லை. இதனால் படக்குழுவுக்கும் அவருக்கும் தகராறு என்று பேசப்பட்டது. ஆனால் அரவிந்த் சாமி அப்படிப்பட்டவரல்ல... நான் விசாரித்த வகையில் ஏற்கனவே திட்டமிட்டபடி குடும்பத்தினருடன் அமெரிக்கா சென்றுள்ளார் என்றும் விரைவில் சென்னை திரும்பியதும் இதுகுறித்து பேசுவேன் என்றும் தெரி வித்தார்.

**வாங்கண்ணா வந்து உண்மையை நீங்களே சொல்லுங்கண்ணா!**

**சின்னத்திரையில் அனைவராலும் சிறப்பாக பேசப்படுபவர் ஆடம்ஸ். இந்த இதழ் முதல் சினிமா செய்திகளை மித்ரா டைம்ஸ் வாசகர்களுக்கு வழங்குவார்.**



# வில்லனாக சினேகாவின் கணவர் பிரசன்னா

திருட்டுப் பயலே-2 வெளிவரவுள்ளது. இப்படத்தில் பாபி சிம்ஹா கதாநாயகனாகவும், அமலாபால் கதாநாயகியாகவும் நடிக்கிறார்கள். வில்லன் பாத்திரத்தில் நடிகை சினேகாவின் கணவரும் நடிகருமான பிரசன்னா அசத்துகிறார். இந்த பாத்திரத்திற்காக சிக்ஸ் பேக் பயிற்சி எடுத்து வருகிறார் பிரசன்னா. **சினேகா மேடம் தயார் பண்ணுங்க...**





# முதல்வர் ஆகிறார் சசிகலா

ஹாய்... ஹேப்பி நியூ இயர் என்று சொல்லிக்கொண்டே உற்சாகமாக நுழைந்த கபாலிக்கானுக்கு கேக் கொடுத்து அவர் வாயில் ஊட்டினோம். கேக் சாப்பிட்டுக் கொண்டே செய்திகளை கொண்ட ஆரம்பித்தார்.

### சசிகலா பொதுச்செயலாளர் ஆகிட்டாரே?

ஆமா... அந்தக் கட்சியில் நிர்வாகிகள் அனைவருக்கும் இப்போதுதான் நிம்மதி ஏற்பட்டது. ஏன்னா... ஆட்சியில் இருக்கும் பன்னீர் செல்வம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாலும் அதனால் சசிகலா பொதுச்செயலாளர் பொறுப்பு ஏற்பதற்கு மத்திய அரசு தடையாக ஏதேனும் "உள்குத்து" வேலை செய்து கட்சிக்குள் கலவரத்தை ஏற்படுத்துமோ என்று பயந்தனர்.

### ஏதோ கலாட்டா நடந்துதாமே?

அது எம்.பி.சசிகலா புஷ்பா கணவர் நடத்திய பரபரப்பு... பொதுக்குழுவுக்கு முதல் நாள் சசிகலா புஷ்பாவின் கணவர் லிங்கேஸ்வரர் திலகம் ராயப்பேட்டையில் கட்சி அலுவலகத்திற்கு வந்து பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டி யிட விண்ணப்பம் கேட்டு வந்திருக்கிறார். அவரை "விண்ணப்பமா கேட்குற, இந்தா வாங்கிக்கோ என்று மூக்கிலேயே குத்தி அடிச்சு அனுப்பிட்டாங்க..." போலீஸ் அவரை





# கபாலிகான் நியூஸ்

காப்பாற்றி பொதுக்குழு முடியும் வரை வைச்சிருந்து அனுப்பிட்டாங்க.

**தீபாவும் ஒன்னும் பண்ணலையே?**

தீபாவுக்கு அரசியலில் அனுபவமும் இல்லை. ஆர்வமும் இல்லை. குடும்ப உறுப்பினர் என்ற முறையில் ஜெயலலிதாவுக்கு பின் தன்னை வாரிசாக முன்னிருத்திக் கொள்ள நினைக்கிறார். அவ்வளவுதான். ஆனால் சசிகலாவுக்கு பிடிக்காதவர்கள் தீபாவை அரசியல்வாதி ரேன்ஞ்சுக்கு கட்அவுட் பேனர் வைத்து போராட்டாம் அது, இது என்று ஆரம்பித்தனர். "போதும் இதோட நிறுத்திக்குவோம்"என்று தீபா சொல்லிவிட்டார்.

**அப்ப பரபரப்பு இருக்காதா?**

ஏன் இருக்காது. அடுத்த பரபரப்பு பன்னீர் செல்வம் தான். அவர் வைச்சிருக்கிற முதலமைச்சர் பதவி சசிகலாவுக்கு வந்து சேரும்வரை பரபரப்புதான்.



**நடக்குமா?**

ஏன் நடக்காது? பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சராக உள்ள அர்.டி.உதயகுமார், செல்லூர் ராஜு போன்ற அமைச்சர்கள் சின்னம்மா முதலமைச்சராகனும்னு பேச ஆரம்பிச்சுடாங்கல்ல...

**அதுக்கு எம்.எல்.எ. ஆகனுமில்ல?**

அதுவா கஷ்டம் ஆர்.கே நகரில் நிப்பாங்க. இதில் ஜெயிக்க முடியாதுன்னு நெனச்சா ஆண்டிப்பட்டில நிப்பாங்க... அங்க தங்க தமிழ்ச்செல்வன் தங்க தாம்பாளத்தட்டு வைச்சுக்கிட்டு சின்னம்மாவை வரவேற்க தயார நிற்குறாரே...!

**சரி.. சரி... சின்னம்மா புராணம் தவிர வேற ஒண்ணும் இல்லையா?**

இருக்கு. தி.மு.க. ஏதாவது வாய்ப்பு கிடைக்குமான்னு "கொக்கு" மாதிரி வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கு. பி.ஜே.பி. சைலென்ட்டா காயை நகர்த்துது. காங்கிரஸ் நட்புறவு அ.தி.மு.க.வுக்கு கிடைக்க "அரசர்" வழி ஏற்படுத்துறார். வைகோ. ரோட்டில் நின்னு வேடிக்கை பார்த்துட்டு எந்தப்பக்கம் போலாம்னு நினைப்பவனைப் போன்ற மனநிலையில் இருக்காரு. மற்ற கட்சிகள் சின்னம்மா தலைமையில் கூட்டணி வைச்சுக்கலாமானு நினைக்குறாங்க...

**மத்திய அரசு என்ன பண்ண போகுது?**

ரூபாய் நோட்டுப் பிரச்சனை நீரு பூத்த நெருப்பாய் புகைஞ்சுக்கிட்டிருக்கு... தனது வசீகர வார்த்தைகளால் மோடி அதை அனைக்க முயற்சிக்கிறாரு.

**2017ம் வரும் எப்படி இருக்கும்?**

மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளைப் பொருத்தே நமது வாழ்க்கையில் திருப்பு முனையோ... சறுக்கு முனையோ ஏற்படும். தலைமைச் செயலகத்தில் எனக்கு வேலை இருக்கு.... என்று தெனாவட்டாக நடந்தார் கபாலிகான்.

# உறவுகள்

**கண்ணதாசன் சிந்தனைகள்**



“மனிதன், சமூக வாழ்க்கையை மேற்கொண்டு விட்ட ஒரு மிருகம்” என்றார்ஓர் ஆங்கில அறிஞர்.

காட்டுமிராண்டிகளாகச் சிதறிக்கிடந்த மனிதர்கள்குடிபெயர்ந்துஊர்ந்து வந்து ஓரிடத்தில் சேர்ந்தார்கள். அதனால் அவர்கள்சேர்ந்து வாழ்ந்த இடம் ‘ஊர்’ என்று அழைக்கப்பட்டது.

அதில் பலர் நகர்ந்து வந்து பெருங்கூட்டமாக ஓரிடத்தில் குடியேறினார்கள். அவ்விடம் ‘நகரம்’ என்றழைக்கப்பட்டது.

தனிமனிதர்கள் ‘சமூக’மாகி விட்டார்கள். தனி மனிதனுக்கான நியதிகளோடு சமுதாயத்திற்காக சில சம்பிரதாயங்களும் உருவாயின. அந்தச்சம்பிரதாயங்களுள் சில புனிதமாகக்கருதப்பட்டுத்தருமங்களாயின.

கணவன்மனைவி உறவு, தாய்தந்தை பிள்ளைகள் உறவு, தயாதிகள் பங்காளிகள் உறவு, ஊர்ப்பொது நலத்துக்கான கூட்டுறவு முதலியவைகள் தோன்றின. தாய் வழித்தோன்றல்களெல்லாம் ‘பங்காளி’களாகவும் தந்தையுடன்பிறந்தசகோதரிகளெல்லாம் ‘சம்பந்தி’களாகவும் ஒரு மரபுஉருவாயிற்று.வார்த்தைகளைகவனியுங்கள்.

தந்தைவழி பங்குடையவன்என்பதாலே ‘பங்காளி’யாகவும்,தாயைஆதியாகவைத்து விளைந்த சகோதரத்துவம் ‘தாயாதி’என்றும் கூறப்பட்டது.

‘சகோதரன்’ என்ற வார்த்தையே ‘சக உதரன்ஒரே வயிற்றில் பிறந்தவன்’ என்பதைக்குறிக்கும்.

சம்பிரதாயங்களாகத் தோன்றியஉறவுகள்மரபுகளாகி, அந்த மரபுகள்எழுதாத சட்டங்களாகிவிட்டன. இந்த உறவுகளுக்குள்ளும், பொதுவாகச்சமூகத்திலும் நிலவ வேண்டியஒழுக்கங்கள்சம்பிரதாயங்களாகி,மரபுகளாகி, அவையும் சட்டங்களாகிவிட்டன.

இந்தச்சட்டங்களேநமது சமூகத்தின்கௌரவங்கள் : இந்த வேலிகள் நம்மைக் காவல் செய்கின்றன. இந்த உறவுகள், ஒழுக்கங்களக்கும்நிம்மதிக்குமாக உருவாக்கப்பட்டவை. ஆனால் இவை மட்டும்தானா உறவுகள்? இந்துமதம் அதற்கொரு விளக்கம் சொல்கிறது. “பிறப்பால் தொடரும்உறவுகளல்லாமல் பிணைப்பால் தொடரும் உறவுகளே உன்னதமானவை” என்பது இந்துமதத் தத்துவம்.


**மித்ரா டைம்ஸ்**

**மாத இதழ்**

மித்ரா 2 டிசம்பர் 2016 டைம்ஸ் 7

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தியாசிரியர்
**தம்பி முருகானந்தம்**
**9381788645**

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

மாவட்ட செய்தியாளர்கள்
**திண்டுக்கல் முபாரக்**
**கோவை** K. **சாகுல் ஹமீது**
**சேலம் பிரவீன்குமார்**
**திருப்பூர்** R. **அருண்**

**வடிவமைப்பு**
**மித்ரா டிசைன்ஸ்**
விற்பனை, விளம்பரம், சந்தா
**044-23743007/8**



## அலுவலக முகவரி

602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு,
சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 9841843773**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**



**Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021. Editor : M.SUNDARAMOORTHY.**